1503

தொகுதி 9.] 1930ஹு பிப்ரவரிமீ 1உ [பகுதி 1.

# மனமோகினி

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்




15 MAR 193

# மனமோகினி

## ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களை வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஞ [illegible]பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் [illegible]வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களு[illegible]றை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு [illegible]கா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான [illegible]ன ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" என்ற நாவல்கள் முடிவுபெற்று [illegible]ப்பொழுது இரத்தினபுரி இரகசியம் 3-ம் பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் [illegible]த்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்[illegible]ர் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரெளன் 80-பக்க[illegible]ண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-ய[illegible]லா முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

| | | | | |
|---|---|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ரூ. | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | [illegible] |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |
| கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் | ,, | 3 | 4 | 0 |
| இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் | ,, | 2 | 0 | 0 |
| இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம் | ,, | 1 | 12 | 0 |
| சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி | ,, | 2 | 0 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மத[illegible]

15 MAR 1930

கௌரி—ஆ! நீ யென்னைப் பழைய அறிமுகமாய்க் கருதும் வரையில் நானும் மனப்பூர்வமாய் உன்னை யப்படியே கருதி உண்மையைக் கூறுகிறேன். நான் ஒரு விசேஷ காரியமாய் வந்திருக்கிறேன். அதுமட்டும் நிறைவேறினால் எனக்கு நாலைந்து நூறு வெகுமதியாய்க் கிடைக்கும். அதில் சம்பந்தப்படும் அதிஷ்டசாலியாகிய மாதுக்கு அப்படி ஆயிரக்கணக்காய் கிடைக்கும். என் கராக்கி யாசாமி பணத்தை ஓட்டுப்பில்லைகள்போல் இத்தகைய விஷயத்தில் மதிப்பவன். ஆனால் நான் கோரும் பொருள்மட்டும் கிடைக்கவேண்டும்.

பொன்னு:—உனக்கு அகப்படவேண்டியதுதான் என்ன. அதை வெளிப்படையாய்த்தான் கூறு பார்ப்போம்.

கௌரி:—என் பழைய கிராக்கிகளைச் சேர்ந்த ஒருவனிருக்கிறான். அவனுக்கு வயது உன்னிலும் அதிகமிருக்கும். ஆனால் பார்வைக்கு நாணயமும் அழகுமுடையவனே. அந்த மூடனுக்கு இதுகாறுங்கண்ட பழைய ஆசாமிகள்மேல் வெறுப்படைந்துவிட்டதாம். புதிதாய் ஒரு அழகிய மாது வேண்டுமாம். அவன் தனியாளான தாலும் நமது நாட்டிலுள்ள முதல்தர செல்வந்தரில் ஒருவனானதாலும், பணத்தை யிதிற் செலவழிப்பது அவனுக்கு ஒரு விளையாட்டாகவே யிருக்கிறது. கிழமூடன். நமக்கென்ன? நல்ல பணம் கிடைப்பதுதான் வேண்டியது.

இச் சங்கதிகளைக் கேட்டதே பொன்னுசாமிப்பிள்ளை ஒருவித உற்சாகமடைந்து மிக்க சிரத்தையோடு "அவனுக்கு எத்தகைய மாது வேண்டுமாம்?" என்றான்.

கௌரி:—அவள் அழகுடையவளாகவும் [illegible]மடைந்த நாணயவதியாகவும் இருக்கவேண்டுமாம். மற்ற விஷ


128542

யங்கள் எல்லாம் என் பிரியப்படியேதான். வெளிப் பேட்டையில் யாரோ ஒரு அழகிய மாதிருப்பதாய்க் கேள்விப்பட்டேன். ஆனால் இங்குவந்து விசாரித்த போது அவள் தன் கணவனோடு எங்கோ போய்விட்டா ளென்று கேள்விப்பட்டேன். எனக்கு என்ன செய்வ தென்று ஒன்றுமே தோன்றவில்லை. அந்த அதிட்ட வதிமட்டும் சிக்கினால் அவளுக்கு ஒரு ஆயிரம் கிடைக் கும்.

பொன்னுசாமிப்பிள்ளை வியப்படைந்து "என்ன? நீ கூறுவது ஒருநூறோ!" என்றான்.

கௌரி:—நான் கூறியதே சரி, ஒரு ஆயிரம் அம்மாதிற்குக் கொடுப்பான். எனக்கு இரண்டுநூறுவது கிடைக்கும். ஆனால் அத்தகைய மாதை யெங்கே கண்டு பிடிப்பது?

பொன்:—அப்படியானால் எனக்குத் தெரிந்த ஒரு மாதிருக் கிறாள். அவளை நான் இதற்குச் சம்மதிக்கக்கூடும் என்றே நினைக்கிறேன்.

கௌரி:—ஆ! தாங்கள் மட்டும் இதில் எனக்கு உதவிசெய் தால் அந்நன்றியை யொருபோதும் மறவேன். அதோடு இச்சங்கதி மிக்க இரகசியமாகவே யிருக்கும்.

பொன்:—பணம் எப்போது கொடுக்கப்படும்?

கௌரி:—அம்மாது என் வண்டியில் வந்தேறியவுடனே பாதி தொகை யளிக்கப்படும். மீதி அவள் என் வீடு சேர்ந்ததே யவள் கையில் கொடுக்கப்படும்.

பொன்:—அப்படியானால் இந்தவிஷயத்தில் நான் உனக்குப் பூரண உதவிசெய்கிறேன். அம்மாது நீ எதிர்பார்ப்பதி னும் மிக்க அழகுடையவளாகவும் நாணய முடையவ

ளாகவுமே யிருப்பாள் என்பதில் எள்ளளவு சந்தேகமு மில்லை.

கௌரி:—ஆ! தாங்கள் மட்டும் இவ்வுதவியைச் செய்துவிட்டால்.....

போன்:—சரி. இது முடிந்தமாதிரியே. இன்று சனிக்கிழமை. திங்கட்கிழமை இரவு எட்டுமணிக்கு நமது வீட்டிற்கு வரும் சந்தில் வண்டியைக் கொண்டு நிறுத்திவிட்டு வா. உன்னிடம் உண்மை கூறுகிறேன். அவள் என் மனைவிக்குப் பருதிபுரத்தில் அறிமுகமான மாது. கலியாணமானவள்; ஆனால் ஒருமாதிரியாய்விட்டாள்.

கௌரி:—"இந்த விபரங்களையெல்லாம் நான் அறிய விரும்பவில்லை. அந்த ஆள் அவனுக்குப் பிரியப்பட்டால் தன் பெயரை யொருசமயம் கூறினாலும் கூறுவானேயன்றி இம்மாதை நீ யாரென்றாவது உன்பெய ரென்னவென்றாவது கேட்கவேமாட்டான்" என்றாள்.

இவ்வாறு இவர்கள் அசேதகமான ஏற்பாடு முடிவடைந்ததே கௌரி ஹோட்டல்காரியிடம் சென்று நான் பொன்னுசாமிப் பிள்ளையைப்பற்றி யுன்னிடம் விசாரித்த சங்கதிகளை யாருக்கும் கூறாதே. இந்தா! இந்த பத்து ரூபாயைப் பெற்றுக்கொள். நான் அதிசீக்கிரத்தில் மறுபடி இங்கு வருவேன். நீ இந்த இரகசியத்தை வெளியிட்டிருந்தால் அது எனக்கு எப்படியும் தெரிந்துவிடும். வெளியிடவில்லையென்று தெரிந்தால் இன்னும் பத்து ரூபா யுனக்களிப்பேன்" என்று கூறி ரூபாய்களை யளித்துவிட்டு நகரத்திற்குப் புறப்பட்டாள்.

* * * *

* * *

ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் பத்துமணி யிருக்கும். மரகதவல்லி தன் வீட்டிலிருந்து புறப்பட்டு வழக்கம்போல் கோயிலுக்குச் சென்றாள். அவள் இவ்வாறு தனியாய்க் கோயிலுக்குச் சென்று நெடுங்காலமாய்விட்டது. இது காறும் அவள் புத்திரிகள்கூடச் செல்வார்கள். இச்சமயம் அவள் நேராய்க் கோயிலுக்குச் செல்லாமல் வீட்டின் பக்கத்திலிருந்த ஒரு சிறு சந்தின் வழியாய்ச் சென்றாள். அதன் கோடியில் ஒரு மனிதன் நின்றுகொண் டிருந்தான். மரகதவல்லி யவனைக் கண்டதும் நின்று, "நீ செல்வநாதன் என்று கருதுகிறேன்" என்றாள்.

உண்மையில் அவன் நமது செல்வநாதனே யாதலால் "ஆம் அம்மா, தாங்களே மரகதவல்லியம்மாள் என்று நம்புகிறேன்" என்றான்.

அம்மாள்:—ஆம். நீ யனுப்பிய கடிதத்தில் ஏதோ மிக்க முக்கியமான விஷயமாய் என்னை யிரகசியமாய்க் கண்டு பேசவேண்டுமென்று எழுதியிருந்ததால் நான் அவ்வாறே யுன்னைச் சந்திக்க வந்தேன்.

செல்வ:—அக்கடிதத்தில் ஒரு களவு நேரப் போவதாக உனக்கு எச்சரிக்கை செய்ததோடு அதைத் தடுக்க நான் முயல்வதாகவும் ஆகையால் இச்சங்கதியை யாருக்கும் கூறவேண்டாமென்று எழுதி யிருந்தேன்.

மரகதவல்லி:—ஆம் ஆம். அதன்படிக்கே நான் ஒரு பூதரிடமும் கூறவில்லை.

செல்வநாதன்:—"அக்களவைத் தடுப்பதோடு கள்ளரைப் பிடித்துக்கொள்ள வேண்டு மென்பது என் கருத்து. நான் ஒரு சங்கதி கூறுகிறேன். நீ திடுக்கிட வேண்டாம். இன்று இரவு உன் வீட்டைக் கொள்ளை யடிக்கப் போகிறார்கள்.

இதைக் கேட்டதே அம்மாது திகிலடைந்து,"அய்யோ! வெள்ளித் தட்டுகள் முதலிய சாமான்கள்..." என்றாள்.

செல்வ:—ஆம். அச்சாமான்களைக் கொள்ளையடிக்கவேண்டுமென்பதே கள்ளர் நோக்கம். அவற்றின்மேல் இராஜாங்க முத்திரை யிடப்பட் டிருக்கிற தல்லவா.

மரகத:— "ஆம் ஒவ்வொன்றின் மேலு மிருக்கிறது. அந்தோ! அவற்றின் பாதுகாப்பிற்கு நான் ஜவாப் தாரியா யிருக்கிறேன்.

செல்வ:—அம்மா! நான் சொல்கிற ஏற்பாட்டின்படி நீ நடந்துகொண்டால் உன் சாமான்களில் எள்ளளவுகூட களவு போகாது.

மரகத:—அய்யோ! நீ கூறுகிறபடியே நடந்துகொள்கிறேன். இதன் விவரந்தா னென்ன? தயைசெய்து கூறு.

செல்வ:—உன்னுடைய வீட்டிலேயே பெரிய கள்ளப்பயல் ஒருவ னிருக்கிறான். அவனே கள்ளருக்கு உளவா யிருக்கிறான். அவன் உன் முக்கிய வேலையாளாகிய சாரங்கனே. இத்தகைய விஷயங்களைக் கண்டுபிடிக்க என்போன்ற தொழிலாளிகளுக்குப் பல வழிக ளிருக்கின்றன. அவற்றை யெல்லாம் விவரமாய்க் கூற இது சமயமல்ல. இன்றிரவு பனிரண்டு மணிக்குக் கொள்ளை யடிக்கப் போகிறார்கள். அதற்கு வேண்டிய யேற்பாடுக ளனைத்தும் தயாரா யிருக்கின்றன. வெள்ளிச் சாமான்க ளிருக்கும் அலமாரிக்குச் சரியான ஒரு கள்ளச்சாவியும் தயார் செய்யப்பட் டிருக்கிறது.

மரகதவல்லி யிச் சமாசாரங்களைக் கேட்டதும் மிக்க திகிலடைந்து, "அந்தோ! இதற்காக நீ கூறும் ஏற்பா

டென்ன? அச்சாமான்களை யுடனே அப்புறப்படுத்தி விட லாகாதோ?" என்றாள்.

செல்வ:—அப்படிச் செய்யலாகாது. களவாடும்போதே அவர்களைப் பிடித்துக் கொடுத்துவிட வேண்டும். அதுவே என் தீர்மானம். ஆகையால் நான் கூறுகிற ஏற்பாட்டின்படி தாங்கள் நடந்தால்தான் அனுகூலம்.

மரகதவல்லி:—அப்படியே செய்கிறேன். உண்மையில் அந்த வெள்ளிச் சாமான்கள் இளவரசி யுடையவை. அவள் இப்போது அன்னிய நாட்டிலிருக்கிறாளென்று உனக்கும் தெரியலாகும். அவள் போகும்போது பணத்திற்குக் கொஞ்சம் இடைஞ்சலா யிருந்ததால் அவற்றை யீடுவைத்து என் சினேகி யாகிய ஒரு சீமாட்டியிடம் இரண்டாயிரம் சவரன்கள் கடன் வாங்கிக்கொண்டு சென்றாள். இதனால் அவை மிக்க விலை பெற்றவை யென்று நீ யுணரலாம். அச் சீமாட்டி திடீலென்று வெளிநாட்டிற்குச் சென்றதால், இவற்றை வேறு யாரிடமேனும் வைத்தால் இரகசியம் வெளியாய்விடுமென் றஞ்சி என்னிடம் வைத்துச்சென்றாள். அந்தச் சாமான்கள் களவு போய்விட்டால் நான் எத்தகைய இக்கட்டில் சிக்கிக்கொள்வேன் என்பது உனக்கு விளங்குமென்றே இந்த உண்மைகளை யுனக்குக் கூறினேன்.

செல்வ:—நீ யவற்றைப்பற்றி சற்றும் அஞ்சவேண்டாம். என் ஏற்பாட்டின்படி நடந்தால் சாமான்களுக்குச் சற்றும் ஆபத்து நேராது.

மரகத:—அந்த ஏற்பாடுகளென்ன?

செல்வ:—சாதாரணமாய் நீங்கள் யாவரும் இரவில் எப்போது சந்தடி யடங்கிச் சயனித்துக் கொள்வது?

மரகத:—இரவு பத்தரை மணிக்கு.

செல்வ:—சரி. இன்றைக்கும் அதே வேளைக்குச் சந்தடியடங்கியபின் பதினொரு மணிக்கு என்னையும் என் ஆட்களையும் நீ வீட்டிற்குள் இரகசியமாய் விட்டு எங்களை யொருவிடத்தில் மறைத்துவைக்கவேண்டும்.

மரகத:—சரி வேலைக்காரர் பின்பக்கமே யிருப்பார்களாதலால் தெருக்கதவையே திறந்துவைக்கிறேன். நீங்கள் சமையலறையின் உக்கிராணத்தில் மறைந்திருக்கலாம்.

செல்வ:—சரி அவ்வளவே நீ செய்யவேண்டியது. மற்ற சங்கதி நான் பார்த்துக்கொள்கிறேன்.

சற்று நேரத்திற்குள் செல்வநாதன் விடைபெற்றுச் சென்றான். அன்றிரவு வழக்கம்போல் யாவரும் சயனத்திற்குச் செல்லும்போது சாரங்கனை விளித்து "காலை ஒன்பது மணிக்கு நான் வெளியிற் செல்லவேண்டும். ஆகையால் வண்டி அந்த வேளைக்கு ஆயத்தமாயிருக்கவேண்டும்" என்றாள். அவள் அன்று நடந்துகொண்ட மாதிரியால் சாரங்கனுக்குச் சற்றும் சந்தேகமே யுண்டாகவில்லை.

மரகதவல்லிக்கு மட்டும் பெருந்திகிலே. கள்ளர் ஒரு சமயம் முன்னடி வந்துவிட்டு நம்மைக் கொன்றுவிட்டாலும் கொன்றுவிடலாமே யென்று பெரும்பயம் உண்டாய்விட்டது. கடைசியில் மணி பதினொன்றடித்ததே திகிலோடு போய் தெருக்கதவைத் திறந்தாள். உடனே செல்வநாதனும் அவனுடைய ஆட்கள் அறுவரும் உள்ளே நுழைந்தார்கள். அவர்களைக் கண்டதும் மரகதவல்லிக்கு நிம்மதியுண்டாயிற்று. அவர்களை யழைத்துப்போய் மேற்கூறப்பட்ட அறையில் விட்டுவிட்டுத் தன் அறைக்குச் சென்று நடக்கப்போகும் விவகாரத்தை மிக்க கலவரத்தோடும் ஆவலோடும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். இனி நாம் வீட்

டின் மேல்மாடியில் தன் படுக்கையில் உட்கார்ந்து ஆவலோடு தன் நண்பர்களை யெதிர்பார்த்துக்கொண் டிருக்கும் சாரங்கனைக் கவனிப்போம். தனக்கு வலைவிசப்பட்டிருக்கும் சங்கதியைச் சற்றும் அறியாத அம்மூடன் தன் எஜமானியின் சாராயபுட்டிகளில் ஒன்றை யெடுத்துவந்து திறந்து சந்தோஷமாய்க் குடித்துக்கொண்டே யிருந்து, மணி பனிரண்டாகும்போது இரும்புப் பெட்டிக்குத் தான் தயார் செய்து வைத்துக்கொண்டிருக்கும் கள்ளச்சாவியிருக்கிறதா வென்று தன் உள்ஜேபியில் தடவிப் பார்த்துக்கொண்டு பூனைபோல் சந்தடி செய்யாமல் மாடியிலிருந்து கீழிறங்கத் தொடங்கினன்.

அவன் மாரகதவல்லியின் அறையண்டை வந்து நின்று ஒத்துக்கேட்டான். ஒரு சந்தேகமும் தோன்றவில்லை. சரி பெரிய கொள்ளை யகப்படப் போகிறதென்று மிக்க சந்தோஷத்தோடு ஒரு மெழுகுவத்தியைக் கொளுத்திக்கொண்டு கீழிறங்கிச் சென்று, பின்பக்கக் கதவைத் திறந்ததும் கொலையாளியாகிய தானப்பன் உள்ளே வந்தான். உடனே இரண்டு கள்ளர்களும் பாத்திரங்களிருக்கும் அறைக்குள் சென்றார்கள்.

சாரங்கன்:—பை கொண்டுவந்தாயா?

தானப்பன் "இதோ" என்று தன் நீண்ட பெரிய சட்டைக்குள் மறைத்து வைத்துக்கொண்டிருந்த ஒரு பையை யெடுத்துக்காட்டி, "கிழகரிக்கும் சொல்லிவைத்திருக்கிறேன், காலை ஐந்து மணிக்கு அவன் யாவற்றையும் உருக்க ஆயத்தமாய் உலைக்குத் தீபோட்டுக்கொண்டிருப்பான். நானதற்கு முன்பே போய்ச் சேர்ந்துவிடுவேன். மூன்றுமணி நேரத்தில் போய்ச் சேர்ந்துவிடுவேன்." என்றான்.

சார:—அப்படியானல் நடந்தா போகப்போகிறாய்?

தானப்:—ஆம் குறுக்கு வழியே புலன்களின் மேல்விழுந்து போய்விடுவேன். அப்படிக்கின்றி வீதியின் கோடியில் ஒருவண்டி கொண்டுவந்து நிறுத்திவைத்துப் பார்ப்பவர்களுக்குச் சந்தேகத்தை யுண்டாக்கிவிட்டுப் பிறகு துப்பறியும் கள்ளப்பயல்களுக்கும் சுலபமாய் உளவகப்படும்படி செய்பவோ. நானல்ல அத்தகைய மூடன். இனி சீக்கிரம் இப்பெட்டியைத் திற. அவைகளைப் பார்ப்போம்.

சாரங்கன் அவ்வாறே பெட்டியைத் திறக்கத்தொடங்கினான். இரும்புப் பெட்டியின் கதவு பூரணமாய்த் திறக்கப்படுவதற்குள் தபதபவென்று காலடிகளின் சத்தம்கேட்டதும் போலீஸார் அறைக்குள் வந்து கள்ளரைச் சூழ்ந்துகொண்டார்கள். செல்வநாதனையும் அவன் ஆட்களையும் கண்ட தானப்பன் திப்பிரமை யடைந்துவிட்டான். சாரங்கன் செல்வநாதனைக் கண்டதில்லை யாதலால் போலீஸ்காரர் என்றுமட்டு மறிந்துகொண்டு பெருந்திகிலடைந்தான்.

தானப்பன் சட்டென்று தன் கைத் துப்பாக்கியை யெடுத்து "ஆ திருட்டுப் பயலே" என்று செல்வநாதனை நோக்கிச் சுட்டான். அச்சமயம் செல்வநாதன் சாரங்கனைப் பிடிக்கவே குண்டு சாரங்கன் மார்பிற் பாய்ந்து விட்டது. அவன் ஒரே கூச்சலிட்டுச் சவமாய் விழுந்துவிட்டான்.

இக் குழப்பம் நடக்கும் சமயம்பார்த்துத் தான் அறையைவிட்டு வெளிப்பக்கம் தாளிட்டுக்கொண்டு ஓடிப்போய் தெருக் கதவைத் திறந்துகொண்டு வெளிதாண்டும் சமயம் போலீசார் தான் தாளிட்டக் கதவை யுடைத்துக்கொண்டு வெளிப்பட்டதை யறிந்து தெருக்கதவில் சாவி யிருந்ததால் அதைப் பூட்டிக்கொண்டு வெளிப்பட்டான்.

## 44 - வது அத்தியாயம்

போலீஸார் தானப்பன் தெருக்கதவைப் பூட்டிக் கொண்டு போய்விட்ட சங்கதியை யறிந்து சமையலறையின் சாளரத்தை யுடைத்துககொண்டு வெளிப் பட்டார்கள். மூன்று நான்கு போலீஸார் அவனைத் துறத் திப் பிடிக்க ஓடினார்கள்.

தானப்பன் புலன்களின்மேல் விழுந்து வேலிகளைத் தாண்டிக்கொண்டு ஓடினான். போலீஸாரும் விடாமல் பின் தொடர்ந்தார்கள். வழியில் ஒரு அகழி வந்துவிட்டது. அது தாண்டிக் கூடியதல்ல. அதன் பக்கத்தில் ஆறு ஓடு கிறது. தானப்பன் அங்கு தடுமாற்ற மடைந்து யோசிப்ப தற்குள் போலீசார் நெருங்கிவிட்டதைக் கண்டான். பல பேரைத் தூக்கிற் போட்டவனாதலால், தூக்கில் போடப்படு பவர்களின் மனோ வேதனையை யவன் நன்கறிவான். ஆகை யால் இவர்கள் கையில் சிக்கித் தூக்கில் மடிவதைவிட ஆற் றில் மடிவதே நலமென்று துணிந்து ஆற்றில் குதித்து விட் டான்.

அதே விநாடி போலீஸ்காரார் ஆற்றின்கரைக்கு வந்து ஓரத்தில் நின்று பார்த்தார்கள். ஆற்றிலோ வெள்ளம் வேக மாய்ப் புரண்டுகொண்டு செல்கிறது. அவர்கள் கண்களுக் கெட்டியவரை பார்த்தும் அவன் மேலுக்குக் கிளம்பவே யில்லை. சரி இவன் இதோடு முடிந்தான் என்று தீர்மானம் செய்துக்கொண்டு மாகதவல்லியின் வீட்டிற்குத் திரும்பி னார்கள்.

இதற் கிடையில் வீட்டில் பெருங் குழப்ப முண்டாய் விட்டது. யாவரும் படுக்கையைவிட் டெழுந்து வந்துவிட் டார்கள். கடைசியில் களவுசெய்ய முயன்றதும் கள்ளரில்

ஒருவன் மடிந்ததும் மற்றவன் ஓடிவிட்டதும் போலீஸார் மட்டும் வீட்டிலிருப்பதும் தெரிந்தபின் யாவரும் நடுக்க மொழிந் தமர்ந்தார்கள். அதற்குள் தானப்பனைத் துறத் திச்சென்ற போலீஸார் திரும்பிவந்து நடந்த சங்கதியைக் கூறியபோது யாவரும் தானப்பன் ஆற்றில் மடிந்தா னென் றே தீர்மானித்துக் கொண்டார்கள். செல்வநாதன்மட்டும் "ஒரு சமயம் நான் ஜாடித்தீவின் அகழியிலிருந்து தப்பித் துக்கொண்டது போல் தப்பித்துக்கொண் டிருக்கலாம். போகப்போகப் பார்ப்போம் என்று தனக்குள் கூறிக்கொண் டான்.

* * * *

* * * *

களவு சங்கதி நடந்த இரண்டுமணிநேரம் கழிந்தது. மணி சுமார் இரண்டிருக்கும். அப்போது வாசுதேவ நிலயத் தின் தெருக்கதவைத் தட தட வென்று தட்டினார்கள். பொன்னுசாமிப்பிள்ளை திகிலோடு துள்ளியெழுந்து "ஐயோ போலீசார் எப்படியோ உண்மையறிந்து என்னைப் பிடித்துப் போக வந்துவிட்டார்கள்" என்றான். மனைவியாகிய பத் மாட்சி "ஏன் அப்பத்திரம் இருக்கையில் பயமென்ன? இன் றே நீர் தப்பித்துக்கொண்டு போய்விடலாகாதோ?" என் றாள்.

போன்:--"வீட்டைச்சுற்றிக் காவல் வைத்திராவிட்டால் இவ் வளவு பகிரங்கமாய்த் தெருக்கதவைத் தட்டமாட்டார் கள். அய்யோ! ஒரு முக்கியமான ஏற்பாடு ஒன்று செய்திருக்கிறேன். அதுவும் கெட்டுப்போகும். எதற் கும் நான் உடுத்துக்கொள்கிறேன். நீ சாளரத்தைத் திறந்து யாரென்று கேள்" என்றான்.

மனைவி சென்று அவ்வாறே கேட்டபோது வீதியி லிருந்த ஒரு மனிதன் "ஆபத்து சீக்கிரம் கதவைத் திறவுங்

கள். நான் உங்களுக்கு—புருடன் மனைவி இருவர்க்கும்—சினேகிதனே'' என்றான்.

அதைக் கேட்டதே பொன்னுசாமிப்பிள்ளை துரிதமாய் வந்து தன் மனைவியை நோக்கி "சரி சரி நமது சினேகனே. நீ போய்ப் படுத்துக்கொள். இனி நான் போய் கதவைத் திறந்து விவகாரத்தைப் பார்த்துக்கொள்கிறேன்'' என்று கூறிவிட்டு, வந்தவனை நோக்கி "ஒரு வினாடி பொறு இதோ வந்துவிட்டேன்'' என்று கீழிறங்கிச் சென்றான்.

பத்மாட்சி பேசாமல் தன் படுக்கைக்குச் சென்றாளேனும் நடந்த சங்கதி அவள் மனதிற்குச் சரிப்படவில்லை. நித்திரை பிடிக்காமல் கலவரத்தோடு சிந்தித்துக்கொண்டிருந்தாள். தன் கணவன் தீபத்தை யேற்றிக்கொண்டு வந்தவனை யொரு அறைக்கு அழைத்துச் செல்கிறானென்று தெரிந்தது; ஆனால் பேசிக்கொண்டு போனதுமட்டும் இன்னதென்று புலப்படவில்லை. சற்றுநேரத்திற்குள் தன் கணவன் அறைக்குள் வருவதைக் கண்டாள். அவன் முகக்குறியால் அவன் மிக்க வெறுப்பும் அதிருப்தியும் அடைந்திருக்கிறான் என்று தெரிந்தது. அவள் மனதில் பின்னும் கலவரமும் பீதியும் வெறுப்பும் உண்டாயிற்று. தன் கணவனை நோக்கி, மிக்க ஆவலோடு "என்ன சங்கதி? அம்மனிதன் யார்?'' என்றாள்.

பொன்:—ஒன்றும் அதிசய மில்லை. அவன் ஒரு நண்பன். கடன் கொடுக்கவேண்டியதற்காக அமீனாவிடம் அகப்படாமல் ஓடிவந்திருக்கிறான். மிக்க ஆயாசத்தாலும் குளிராலும் வருந்துகிறான். அவனுக்குக் கொஞ்சம் ஆகாரமும் சாராயமும் அளிக்கவேண்டும். உக்கிராண சாவியைக் கொடு'' என்றான்.

பத்மாட்சி பின்னும் அதிருப்தியடைந்து "சாவி அதோ அந்த மாடத்திலிருக்கிறது. அந்த ஆள் யார்? நம்

மிருவர்க்கும் சினேகிதன் என்று கூறினனே. அவன் குரல் எனக்குத் தெரிந்த குரல்போல் தோன்றுகிறது" என்ருள்.

பொன்:—"அவன் சிங்காரம் என்பவன்; உனக்குக் கவனமில்லையா? யாவும் காலே கூறுகிறேன்" என்று அவசரத்தோடு சாவியை யெடுத்துக்கொண்டு சென்ருன்.

பத்மாக்ஷி யெழுந்து கதவினருகில் நின்று ஒத்துக் கேட்டாள். தன் கணவன் சமையலறைக்குச் சென்று திரும்பி வந்ததும் மறுபடி யம்மனிதனிருக்கும் அறைக்குச் சென்றதும் அறிந்துகொண்டு மஞ்சத்தில் சயனித்துக் கொண்டாள். அவளுக்குக் கலவரமும் திகிலும் அதிகமாய் விட்டது. சிங்காரம் என்ற பெயரை யவள் நம்பவில்லை. அவன் கடனுக்குப் பயந்துவந்தவன் என்பதையும் நம்ப வில்லை. அதோடு அவன் அத்தகைய அகாலத்தில் வந்து கதவைத் தட்டியமாதிரியால், இவர்கள் கட்டாயம் நமக்கு இடமளித்தே தீரவேண்டுமென்ற தீரமுடையவன் போல் தோன்றியது. பொன்னுசாமி பிள்ளையோ ஒருவருக்கு அத்தகைய சகாயம் செய்யச் சிரமம் எடுத்துக்கொள்கிறவனல்ல. இவையாவும் நோக்கவந்த மனிதனுக்கு இவன் எந்த விஷயத்திலோ கட்டுப்பட்டவனு யிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. யாவற்றையும் நோக்கப் பத்மாட்சிக்கு மிக்க மனவருத்தமும் கலவரமும் உண்டாய்விட்டது. "அய்யோ கடவுளே. இத்தகைய வாழ்க்கையை யின்னும் எத்தனை நாட்கள் நாம் சகிக்கக்கூடும். இத்தகைய அயோக்கியம் அக்கிரமத்திற் கஞ்சாத கல்நெஞ்சன், இத்தகைய போக்கிரிக்கு மனைவியா யிருப்பதினும் ஒரு யோக்கியனுக்கு வைப்பாட்டியாயிருக்கலாமே. சேசே! இவனைவிட்டொழிய வழிதேட வேண்டியதே. ஆ! அப் பயங்கர இரகசியம், ஆம் ஆம்...... செய்தே தீர்த்துவிடுகிறேன்......ஆம் ஆம் ஏதேனுமொன்று

செய்யத் துணியவேண்டியதே......'' என்று அவள் சிந்தித்துக்கொண்டேயிருக்கையில் பொன்னுசாமி அறைக்குள் வந்தான்.

பத்மாட்சி வந்தவன் யாரென்றறியவேண்டும் என்ற துணிகரத்தோடு தன் கணவனை நோக்கி "இனியாவது வந்தவன் யார் என்று கூறலாமல்லவா?'' என்றாள்.

பொன்னுசாமி கடுகடுத்த முகத்தோடு "நான்தான் முன்னமே கூறினேனே. அவன் சிங்காரம் என்ற நண்பன் கடனுக்காக சிறைப்படப் பயந்து ஓடி வந்து விட்டான்; அவனுக்கு ஆகாரமும் இடமும் அளிக்கவேண்டியிருந்தது என்றுதான் கூறினேனே. மற்ற சங்கதி காலையில் பேசிக்கொள்ளலாம். நீ தூங்கும் வேளை'' என்றான்.

பத்:—எனக்கு இப்போது நித்திரை வரவில்லை.

பொன்:—"சரி உனக்கு வராவிட்டால் எனக்கு வருகிறது'' என்றான்.

விடிந்ததும் பொன்னுசாமி துரிதமா யெழுந்து அம்மனிதன் படுத்திருக்கும் அறைக்குச் சென்று சற்றுநேரம் சென்று காலைப் போஜன மருந்தும் வேளைக்கு கூடத்திற்கு வந்தான். பத்மாட்சி யவனைநோக்கி "வந்திருக்கும் மனிதன் நம்மோடு வந்துட்கார்ந்து காலைப்போஜனம் அருந்துவானோ?'' என்று கேட்டாள். பொன்னுசாமி உடனே முரட்டுத்தனமாய் அவளை நோக்கி,

"இப்போது கூறுகிறேன். நீ இம்மாதிரி வீண் கஷ்ரிகள் செய்வதில் பயனில்லை. இங்கு வந்திருப்பவன் என் சிநேகன். அவன் ஆபத்தில் சிக்கியிருக்கிறான். ஆகையால் அவன் இரண்டொரு நாட்கள் இங்குதான் மறைந்திருக்க வேண்டும். அவன் பெயர் சிங்காரமாயிருக்கட்டும் வேறு

எதாவதிருக்கட்டும். அதைப்பற்றி யுனக் கக்கரையில்லை. அவ்வளவே சங்கதி. அவன் இங்கிருக்குமட்டும் தன் அறையிலேயே யிருப்பானன்றி உன் எதிரில் வரமாட்டான். இதற்குமேல் உனக்கு வேண்டிய தொன்றுமில்லை. இவ்வளவே முடிவு" என்றான்.

**பத்மாக்ஷி:**—"அப்படியானால் பகலில் தன் முகத்தைக்கூட வெளியில் காட்டாதபடி அத்தகைய ஏதோ பலத்த குற்றத்தைச் செய்த ஒரு மனிதன் இருக்கும் வீட்டில் நான் வசிக்கும்படி கட்டாயப்படுத்தப் படுவது நீதியாகுமா? தருமமாகுமா? அதிலும் தன் உண்மைப் பெயரைக்கூட வெளியிடக்கூடாத நிலைமையி லிருப்பவன்...." என்றாள்.

**அத்துஷ்டன்:**—"இப்போதென்ன? என்னோடு விரோதியாய்த் திரும்பப் போகிறாயோ. அப்படியானால் ஒரே வார்த்தையாய்க் கூறிவிடு. யார் அதில் ஜெயமடைகிறார்களோ யாருடைய குற்றம் பயங்கரமானதோ பார்த்துக்கொள்வோம்" என்றான்.

பத்மாட்சி சொல்லொணா வியாகூலத்தோடு "சரி சரி. போதும் போதும். நமக்குள் சண்டைவேண்டாம்" என்றாள். ஆனால் அத் துஷ்டன்மேல் அவளுக் குண்டான வெறுப்பு வரவரக் கொடிய வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் ஆவலாய் மாறிவிடும் நிலைமைக்கு வந்து விட்டது.

பொன்னுசாமி சமையலறைக்குச் சென்று ஆகாரம் கொண்டுபோய் வந்திருப்பவனுக் களித்துவிட்டு வந்து தன் மனைவியோடு போஜனம் செய்தான். சாப்பாடு முடியுமட்டும் இருவரும் பேசவில்லை. முடிந்த பின் பொன்னுசாமி தன் மனைவியை நோக்கி "எது எப்படியாயினும் ஒருவன்

வயிறாரப் புசித்தால் உடனே மனம் சாந்தநிலைக்கு வந்து விடுகின்றது'' என்றான்.

பத்மாட்சி யவன் குணங்களின் சுபாவத்தை நன்கறி வாளாதலால் “ஓகோ இவன் ஏதோ புதுவிஷயம் ஒன்றைப் பற்றி பிரஸ்தாபிக்கப் போகிறான் என்று உணர்ந்துகொண் டாள்.

போன்:—“இன்னும் இங்கிருக்க எனக்குப் பிரியமில்லை. நாம் பாஞ்சால நாட்டிற்குப் போய்விடுவதே தகுதி'' என்றான்.

மனைவி:—எனக்கும் இந்த வாழ்க்கைப் பிடிக்கவில்லை.

போான்:—ஆனால் அதற்குக் கொஞ்சம் பணம்வேண்டும்.

மனைவி:—போதுமானதிருக்கிறது.

போன்.—ஆயிரத்தறுநூறோ வென்னமோ விருக்கிறது. குறைந்தது மூவாயிரமின்றி நான் அடி யெடுத்துவைக் கமாட்டேன்.

மனை:—அப்படியானால் அதை யெப்படி சம்பாதிப்பது.

போன்:—நீ தயவுசெய்து கொஞ்சம் உதவி புரிந்தால் நீயே ஆயிரம் பவுன் பெறலாம். நான் இனியுனக்குக்கோபம் வரும்படி செய்யவேமாட்டேன். உன் அபிப்பிராயத் தைக் கூறு.

மனை:—நீர் பலதரம் இம்மாதிரி கூறியிருக்கிறீர். அந்த ஏற் பாடுதான் என்ன ? கூறும் பார்ப்போம்.

போன்.—முன்பு நீயே பிரியப்பட்டு உன் காதலை வேறொரு வனுக் களித்தாய். பிறகு அந்தப் பத்திரத்தில் கையொப்பம் வாங்குவதற்காக இன்னொருவனுக் களித் தாய். இப்போது மூன்றாவ தொருவனுக் களித்து ஆயிரம் பவுன் பெற்றாலென்ன ?

மனைவி தன் கோபம் வெறுப்பு மனோவேதனை யாவும் அடக்கிக்கொண்டு, "இது செலவாய்விட்டால் பிறகு எந்த ஏற்பாடு? கடைசிவரையில் உமது மனைவியின் விபசார நடக்கையாலேயே ஜீவிக்கக் கருதியிருக்கிறீரோ?"வென்றாள்.

அத்துஷ்டன்:—"உன்னை முதலில் நெறி தவறும்படி நான் போதிக்கவில்லை. உன் சௌகரியத்திற்கு நீ செய்து கொண்ட காரியத்தை யென் சௌகரியத்திற்காகவும் செய்தாலென்ன? இன்றேல் அப்பணத்திற்காக நான் வழிபறிக்கொள்ளைக்குப் போகவேண்டும்; இன்றேல் ஒரு கோயிலில் புகுந்து கொள்ளையடிக்கவேண்டும். இப்போது இவ்வுதவியைக் கடைசிதரமாய்க் கேட்கிறேன். இனி யித்தகைய சங்கதியே யுன் காதிற் போடமாட்டேன். நீ எப்படியாவது சம்மதித்துவிட்டால் இனி நமக்குள் மனஸ்தாபமே நேராது. இன்றேல் கடைசிவரையில் யுத்தமே. உன் உயிராவது என் உயிராவது ஒழியுமட்டும்" என்றான்.

பத்மாட்சி:—உமது புண்ணியத்திற்குப் போதும் போதும். நிறுத்தும். இந்த ஏற்பாட்டை யார் உமக்குக் கூறியது?

பொன்னுசாமி கௌரி வந்ததும் அவளுக்கும் தனக்கும் நடந்த சம்பாஷணையையும் விவரமாய்க் கூறினன். யாவும் கேட்டபின் பத்மாட்சி சற்றுநேரம் சிந்தித்துப் பார்த்தாள். கௌரி கூறியமாதிரியால் அச்செல்வந்தன் மிக்க பணக்காரனென்றும், உதாரகுணமும், கருணையும் உடையவனென்று புலப்பட்டது. அப்படி யிருந்தால் அவன் உதவியைக்கொண்டே இப் பாமதுஷ்டனுடைய கூட்டுறவை விட்டொழிய வழிபெறலாம் என்று சிந்தித்துக்கொண்டு புருடனை நோக்கி, "சரி அவ்வாறே அம்மாது வரும்

வேளைக்கு அவள்கூடச் செல்ல ஆயத்தமா யிருக்கிறேன்!" என்று ஒப்புக்கொண்டாள்.

அம்மொழிகளைக் கேட்டதே அச்சண்டாளன் மிக்க சந்தோஷமடைந்து அதுமுதல் அவளுக்கு முகஸ்துதி கூறவும், மிக்க பட்சத்தோடு நடந்து கொள்பவன்போல் நடக்கவும், இச்சகமொழிகளைக் கூறவும் தொடங்கினான். பத்மாட்சிக்கு அவன் இழிகுணம் நன்குய்த்தெரியுமாதலால் அவன் கபடமொழிகளாகிய பொய்ம்மொழிகளை யவள் செவிக்ளில் ஏற்றுக்கொள்ளாமலே தன் சிந்தனையில் தான் இருந்தாள்.

பகற்காலம் கழிந்தது. பொன்னுசாமி வெளிகிளம்பாமலே தலைமறைந்திருக்கும் தன் நண்பன் அறையிலேயே யிருப்பதும் வேளை வேளைக்கு அவனுக்கு ஆகாரங்கொண்டு போய் கொடுப்பதுமா யிருந்தான். கடைசியில் பொழுதமர்ந்து கௌரி வரும்வேளை வந்துவிட்டது. பத்மாட்சியும் முன்னுடியே ஆடையாபரணதிகளால் தன்னை யலங்கரித்துக் கொண்டு ஆயத்தமாயிருந்தாள். பொன்னுசாமிப்பிள்ளை மிக்க எச்சரிக்கையோடு காத்திருந்து குறித்தவேளை வந்ததே தன் மனைவியை யழைத்துக்கொண்டு இராஜபாட்டைக்குச் செல்லும் சந்தின்வழியே நடந்தான். அதன் கோடியில் ஒரு குதிரை வண்டி நின்றிருந்தது. இவர்கள் வண்டியை நெருங்கியதும் அதற்குள்ளிருந்த மூதாட்டி கீழேயிறங்கினாள்.

பத்மாட்சியின் முக விலாசத்தைக் கண்டதே யவள் மிக்க சந்தோஷ மடைந்து, ஒரு பணப்பையைப் பொன்னுசாமியிடம் கொடுத்து அவனைச் செல்லும்படி விடைகொடுத் தனுப்பினாள். அச்சமயம் அவன் இரகசியமாய்க் கௌரியின் செவிகளில் "அவன் வாலிபப் பிரபுவென்றும் மிக்க அழகுடையவ னென்றுமே அவளுக்குக் கூறு. பிறகு எப்படியாவது சரிப்பட்டுபோம்" என்று கூறிவிட்டு வீட்

டிற்குத் திரும்பினான். உடனே மூதாட்டியும் பத்மாக்ஷியும் வண்டியில் ஏறிக்கொண்டதும் வண்டி துரிதமாய்ப் புறப்பட்டது.

சுமார் பத்துமணிக்கு வண்டி கௌரியின் வீடு போய்ச் சேர்ந்தது. வழியில் பத்மாக்ஷி எவ்வளவோ சாமர்த்தியமாய் அம்மூதாட்டியை விசாரித்தும் அவள் அந்த ஆளின் பெயரைமட்டும் கூறவில்லை. அது தனக்கே தெரியாதென்று சத்தியம் செய்துவிட்டாள், வீடு சேர்ந்ததும் பத்மாட்சியை யொரு அறைக்கு அழைத்துச் சென்று சிற்றுண்டி யளித்த பின்பு மிக்க ஆசை வார்த்தைகளைக் கூறி முன்னாடியே பிரபு வந்து காத்திருக்கும் அறைக்கு அழைத்துப்போய் உள்ளே விட்டதும் கதவைத் தாளிட்டுக்கொண்டு வந்து விட்டாள்.

---

## 45 - வது அத்தியாயம்.

நேயர்களே! அறைக்குள் சென்ற பத்மாட்சி அங்கிருந்த பிரபுவைக் கண்டதும் பேரிடி விழுந்தவள்போல் அலறினாள். அவளைக் கண்ட பிரபும் அய்யோ கடவுளே யென்று கதறித் தன் கரங்களை முகத்தின்மேல் அறைந்துக்கொண்டு சிறு குழந்தைபோல் தேம்பித் தேம்பி யழத் தொடங்கினார்.

நண்பர்களே இதன் மர்மம் என்னவெனில் பத்மாட்சியென்று மாறுபெயர் வைத்துக்கொண் டிருப்பவள் உண்மையில் சுகசிங்கம் பிரபுவின் சகோதரன் புதல்வியாகிய தெய்வயானையே. பொன்னுசாமிப் பிள்ளை அவள் கணவனாகிய தேவராயன் என்ற கொடிய போக்கிரிப்பயலே.

பிரபு உடனே சகல உண்மைகளையும் அறிந்து கொண்டார். திங்கள் இரவு நடந்த கொள்ளை யிவள் கணவனாலேயே ஏற்பாடு செய்யப்பட்ட தென்றும், இவளே இளவரசனிடம் அப்பத்திரத்திற்குக் கையொப்பம் வாங்க அவனைக் காதலால் மயக்கியவளென்றும், பிறகு தன் புத்தகத்தைக் கொண்டு வந்து வீட்டில் வைத்தவள் இவளே யென்றும் யாவும் அவருக்கு விளங்கிவிட்டது. அப்பிரபு தான் இழிவான நடக்கைகளில் எவ்வளவுதான் முழுகி யிருந்தாலும், இப்போது தான் யாவரினும் அன்புகாட்டியத் தன் சகோதரன் புதல்வி யித்தகைய இழிவான தொழிலில் பிரவேசிக்க நேர்ந்தது அவர் மனதைத் தீயிட்டுக் கொளுத்துவதுபோல் சகிக்கொணு வேதனை யாய்விட்டது. கன்னிகைக்கோ இலக்ஷக் கணக்காக தேள்களும் நட்டுவாக்களிகளும் விடநாகங்களும் இடைவிடாது தன் மனதில் கொட்டிக்கொண் டிருப்பது போலிருந்தது. அச்சமயம் அவர்களிருவருடைய மனோ வேதனையும் இத்தகையதெனக் கூறஒருவராலும் முடியாது.

சற்று நேரத்திற்குள் பிரபு ஒருவாறு தன் மனதைத் தேற்றிக்கொண்டு, "குழந்தாய், நடந்தது நடந்துவிட்டது. நான் எண்ணி யிருந்ததைவிட உன் கணவன் பெரிய சண்டாளனென்றும் நீ இத்தகைய இக்கட்டில் பிரவேசிக்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டது அவனாலே யென்றும் இப்போது தெரிகிறது. நடந்த விஷயங்கள் எதற்கும் நான் உன்னைக் கடிந்துகொள்ள மாட்டேன். நீ யுடனே யுன் முகத்தைத் துடைத்துக்கொண்டு பேசாமல் என்னோடு வீட்டிற்கு வா. அங்கே யாவும் பேசிக்கொள்ளலாம்" என்று கூறிவிட்டு, கௌரியை விளித்து, "இம்மாது என் அரண்மனைக்கு வருகிறாள். உடனே ஒரு வண்டி பேசிக்கொண்டு வா!" என்றார்.

அம்மாது, "அடடா இக் கிழப்பயல் எப்படியோ இவ்வளவு துரிதமாய்த் தன் உண்மைப் பெயர் முதலியவற்றை யப்பெண்ணுக்கு வெளியிட்டு அவளை வசப்படுத்திக்கொண்டான் பார்த்தாயா!" என்று வியப்போடு சிந்தித்துக் கொண்டே சென்று துரிதமாய் வண்டிபேசிக்கொண்டு வந்தாள். பிரபு அம் மூதாட்டியிடம் ஒரு வார்த்தையும் பேசாமல் தெய்வயானையை யழைத்துக்கொண்டு வண்டியேறிச் சென்றார்.

இருவரும் பிரபுவின் அரண்மனையிலுள்ள இரோஜா அறையில் உட்கார்ந்ததும் அவர் தெய்வயானையை நோக்கி,

"குழந்தாய்! இப்போது நான் முழுவிபரத்தையும் அறியவேண்டியதே. நான் கேட்பது அவற்றைக் கூறுவதால் நீ மனத்துயரை யனுபவிக்கவேண்டுமென்றல்ல. உனக்கு எவ்விதமாய் உதவி செய்யலாகும் என்பதை யறிவதற்கே நான் கேட்பது" என்றார்.

தெய்வயானை மிக்க மனவருத்தமடைந்து தன்னைத் தானே மிகவும் தூஷித்துக்கொண்டு அந்தோ இப்பூமிதேவி யென்னை விழுங்கிவிடலாகாதா......என்று மிக்க பரிதாபமாய்ப் பிலாபித்தாள். பிரபு அவளுக்கு அன்போடு தேறுதல் கூறியபின்,

"அய்யோ என் பெரிய தந்தையே! என்னை யெதைப் பற்றி கூறச்சொல்லுகிறீர்கள்? தாங்கள் கேள்விகேட்டால் நான் உள்ளதை யொளிக்காமல் நடந்தது நடந்தபடி கூறி விடுகிறேன்" என்றாள்.

பிரபு:—உன் கணவனே யுன்னைக் கட்டாயப்படுத்தி இளவரசனைக் காதலால் மயக்கி அப்பத்திரத்தில் கையொப்பம் வாங்கும்படி செய்தான். அல்லவா?

தெய்வயானைக் கண்ணீர் விட்டுக்கொண்டே "ஆம் தந்தையே. அப்படிச் செய்யாவிட்டால் என்னைக் கொன்றுவிடுவதாய்ப் பிரதிக்கனை கூறினன் அவன் எத்தகைய மாபாதகத்திற்கும் அஞ்சாதவனென்றும் சற்றும் இரக்கமில்லாத கன்னெஞ்சனென்றும், குடித்த வெறியில் எதையும் செய்யத் துணிந்துவிடுவானென்றும் எனக்கு நன்ருய்த்தெரியும். ஆதலால் என் உயிருக்குப் பயந்தே அந்த ஏற்பாட்டிற்கு நான் ஒப்புக்கொண்டேன்.

பிரபு:—அப்பத்திரம் எதற்காக. அதில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளென்ன?

தெய்வ:—கொஞ்ச காலத்திற்கு முன்பு அவன் ஒரு பெரிய மனிதர் வீட்டிற்கு விருந்திற்குச் சென்றிருந்தபோது, சந்திரன் என்ற செல்வந்தனை வாலிபனேடு சண்டையிட்டு அவனைக் கொன்றுவிட்டு நாட்டைவிட் டோடிவிட்டான். ஆனல் அதில் ஏதோ சூது நடந்திருப்பதாயும், அது விசாரணைக்குவந்தால் இவன்மேல் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை யடைவானென்றும் தெரியவந்தது. இவனுக்கு இங்கு வாமல் அன்னிய நாட்டிலேயே யிருக்கப் பிரியமில்லை. ஆகையால் அவனுடைய துஷ்ட தந்திரத்தின் சாமார்த்தியத்தால் இந்த யோசனையைக் கண்டுபிடித்தான். இளவரசனை யங்கு கொண்டுவரும் வேலையைத் தானெடுத்துக் கொண்டு, அவரை மயக்கி அப்பத்திரத்தில் கையொப்பம் வாங்கவேண்டிய வேலையை யென் தலைமேல் போட்டான்.

ஆனல் தந்தையே அன்று இளவரசனேடு தாங்கள் வந்ததும், இப் பாதகனே தங்களைக் கொள்ளையடித்தது போதாமல் அப்புத்தகத்தை யெடுத்துக்கொண்டு இன்னும்

அதிக பணம் பறிக்க ஏற்பாடு செய்ததும் அப்போது எனக்குத் தெரியவே தெரியாது. மறுநாட்காலை யாவும்கேட்டதே யென்மனம் பட்டபாடு கடவுளுக்கே தெரியும். அவன் என்னை மிக்க பயப்படுத்தி எந்த தந்திரமாவது செய்து புத்தகத்தைத் தங்கள் அறையில் வைத்துவிட்டு குறித்த தொகையைக் கொண்டுவர வேண்டுமென்று கட்டாயப் படுத்தினான்.

பிரபு:—சரி. அப் பத்திரத்தின் நிபந்தனைதா னென்ன?

தேய்வயானை:—நான் இளவரசனோடு சோரம் போனதாகவும், அதை யென் புருடன் நேரில் பார்த்துவிட்டதால், இளவரசன் பேசாமல் அக்குற்றத்தை யொப்புக்கொண்டு அதற்கு ஈடாக எப்போதேனும் என் கணவனுக்கு எக்காரணத்தா லேனும் எத்தகைய தண்டனை கிடைத்தாலும், அவர் பூரண மன்னுப்படையவேண்டுமென்றும் நிபந்தனைகள், இளவரசன் அதற்குச் சம்மதித்து அப்பத்திரத்தை யெழுதி யளித்தார். இதுவே உண்மை.

பிரபு:—அடடா! என்ன ஆச்சரியமான படுமோசம்.

தேவ்.—இதுமட்டு மல்ல; நான் மூடத்தனமாய் இன்னொருவனைக் காதலித்துவிட்டேன். அதை யென் கணவன் கண்டுவிட்டபடியால் அவனுக் கது ஒரு பெரிய பிடியாய்விட்டது. தந்தையே! இப்போது என்னை யடியோடு வெறுப்பீர். அந்தோ!......"

பிரபு:—இல்லை யில்லை. யாவும் அப்பாம சண்டாளனுடைய கொடிய நடக்கையால் நேரிட்டவை யெனத் தெரிகிறது. அவனைவிட்டுப் பிறிந்துவிட வேண்டியதே. அவனுக்கு வேண்டியது பணமே. நான் ஒரு ஏற்பாடு

கூறுகிறேன். அவன் உன்னை விட்டுவிட்டு அன்னிய நாட்டிற்குச் சென்று அங்கேயே யிருக்கவேண்டியது. அப்படியே யொப்புக்கொண்டால் அவன் எங்கிருந்தாலும் வருடம் ஒன்றுக்கு ஆயிரம் பவுன் அனுப்பி வருவேன்.

தெய்வ:—தந்தையே. தங்கள் உதவிக்கு நான் எவ்வாறு தான் என் நன்றியறிதலைக் காட்டுவேன். தங்கள் தயாளமான ஏற்பாட்டை யச்சண்டாளனிடம் கூறித் தங்களுக்குச் சங்கதி தெரிவிக்கிறேன்.

பிறகு இருவரும் ஆலிங்கனம் செய்துகொண்டதே தெய்வயானை தன் மனைக்குத் திரும்பினாள்.

அவள் வீடு போய்ச் சேரும்போது இரவு மணி ஒன்று பிற்று. அச்சமயம் பொன்னுசாமி தன் நண்பனோடு குடித்துக்கொண்டும் பேசிக்கொண்டு மிருந்தான்.

வீதியில் வண்டி வந்து நின்றதும் தன் மனைவியே வந்திருக்கவேண்டுமென்று தெரிந்து கலவரத்தோடு துரிதமாய் எழுந்து வீதிக்கு ஓடிவந்தான். ஏனெனில் இவள் எங்கே கடைசி சமயத்தில் விவகாரத்தைக் கெடுத்துவிட்டு வந்தாளோ வென்பதே அவனுக்குப் பெருந்திகில்.

தன் மனைவி வண்டியைவிட் டிறங்கியதும் அவளும் தானும் கூடத்திற்குச் சென்றதே அவன் மிக்க ஆவலோடு "என் எல்லாம் சரியாய் நிறைவேறிற்றல்லவா?" என்றான்.

அவள் முகக்குறியால் அவன் வெறிக்கக் குடித்திருக்கிறான் என்று தெரிந்தது. அவள் அவன் கேள்விக்குச் சரியாய் விடை யளிக்காமல் "அட சண்டாளப்பயலே!" என்றாள். அவன் நீ என்ன கூறினாய்? என்றான். அம்மாது அவனுக்குவிடைகூறாமல் அவன் கையிலிருந்த தீபத்தைப் பிடுங்

கிக்கொண்டு நேராய்ப் போஜனக் கூடத்திற்குச் சென்று தாகத்திற் கருந்தினுள்.

தேவராயன் (இனி யவன் பொய்ப் பெயராகிய பொன்னுசாமி யென்பதைவிட்டு உண்மைப் பெயரையே கூறுவோம்) தன் மனைவியை நோக்கி,

"இனியாவது நடந்த சங்கதி யின்னதென்று கூறுவா யென்று நம்புகிறேன். அல்லது காலையில் பேசிக்கொள்ள லாமோ" என்ருன்.

மனைவி:—"காலை கூறுவதை யிப்போதே கூறி முடித்து விடு கிறேன்" என்று கோபத்தோடும் வெறுப்போடும் மொழிந்தாள்.

தேவராயன்:—நீ யென்ன என்னேடு சண்டை பிடிக்கக் கருதுகிருயோ ? என்று பயமுறுத்தும் விதமாய்க் கேட்டான்.

தெய்வ:—உன்னேடு சண்டையே நேர்ந்தாலும் அதைப் பற்றி நான் சட்டை செய்யவில்லை. இப்போது உன் முன் நின்று பேசுகிறது எதற்கும் துணிந் திருக்கும் ஆசாமி யென்று தெரிந்துகொள்.

தேவ:—"அப்படியாயின் உன் துணிகரத்தை யொரு நொடியி லடக்கிவிடுவேன்." என்று கூறிக்கொண்டே கரங் களை முஷ்டி பிடித்துக்கொண்டு, முரட்டுத் தனமாய்ப் பாய்ந்தடிக்க ஆயத்தப்பட்டான்.

தெய்வ:—"பத்திரம் ஆத்திரப்படாதே" என்றதும் ஒரு பாய்ச்சலாய்ப் பாய்ந்து அங்கு மேஜைமே லிருந்த பழம் அறுக்கும் நீண்ட கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டு "இதோ பார் மடையனே ! என்னை யடிக்க முயன்ருயோ அதே நிமிடம் இக்கத்தி உன் இருதயத்

தில் ஆழ இறங்கிவிடும் என்பது நிச்சயம்'' என்று கண்களில் கோபத்தணல் வீச ஆக்ரோஷத்தோடு ஆவேசம் வந்தவள்போல் மொழிந்தாள்.

தேவராயன் .மனச் சோர்வடைந்து "இதென்ன இவளுக்கு வந்தது'' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு, "இருக்கட்டும். என்ன சங்கதிதான் நடந்தது கூறு; நான் சாந்தமாய்க் கேட்கிறேன்'' என்றான்.

தெய்வ:—"நான் அந்த ஐந்நூறு பவுனைக் கொண்டுவந்திருப் பேனென்று நீ மிக்க ஆசையோடு காத்துக்கொண்டிருக்கிறாய். ஆனால் நீ இலவு காத்தக் கிள்ளையைப் போல் ஏமாறவேண்டியதே. ஏனெனில் நான் பணம் கொண்டு வரவில்லை'' என்று மிக்க வெறுப்போடு அலட்சியமாய்க் கூறினாள்.

தேவராயன் மிக்க வெறுப்பும் கோபமு மடைந்து, "அப்படியானால் அம்மனிதனை நீ பார்க்கவே யில்லையோ?'' என்றான். அவள் பார்த்தேன் என்றாள்.

இதைக் கேட்டதே யவன் ஆத்திரத்தோடு துள்ளி யெழுந்து கண்கள் சிவப்பேறி "ஓ! நீ யவனை யேமாற்றி விட்டாயோ? அல்லது கடைசி சமயத்தில் மிக்க பதிவிரதையைப்போல் நடித்துவிட்டாயோ?....'' என்றான்.

தெய்வ:—"இரு இரு. என்னை யழைத்துப்போன அம்மாதின் வீட்டில் நான் சந்தித்த மனிதன் யார் தெரியுமா? என்பெரிய தந்தையாகிய சுகவீரம் பிரபுவே''என்றாள்.

இதைக் கேட்டதே யவன் தலைமேல் பெரிய இடிவிழுந்ததுபோ லிருந்தது. அவன் "அட சனியனே! பெரிய தவால்லவோ நேர்ந்துவிட்டது—'' என்று மனக் கலக்கமும் துயரமும் அடைந்து "அப்படியாயினும் நீ ஏதாவது தந்திரமான காரணம் கூறிவிட்டா யல்லவா?'' என்றான்.

தெய்வ:—இல்லை யில்லை. நான் அப்படியொன்றுங் கூற வில்லை. அவர் என்னை வீட்டிற் கழைத்துச் சென்றார். நான் நடந்த சங்கதி நடந்தபடி கூறிவிட்டேன். கடைசியில் அவர் உனக்கு ஒரு ஏற்பாடு கூறினார். அதாவது நீ இதைவிட்டு, வெளிநாட்டிற் போயிருந்தால் வருடா வருடம் ஆயிரம் பவுன் அனுப்புவாராம்.

தேவ:—அதற்கு ஒரு நிபந்தனையு மில்லையோ?

தெய்வ:—உண்டு அதுமுதல் உனக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது.

தேவ:—அப்படியானால் அதுமுடியாது. நான் உன்னை இவ்வளவு அற்பத்திற்காக விட்டுவிடமாட்டேன்.

தெய்வயானை துணிகரத்தோடு, "ஆனால் என்னுடைய தீர்மானம் முடிவானதே; இனி யொருபோதும் நான் உன்னோடு கூடிவாழமாட்டேன். நான் உனக்குத் துரோகம்செய்தது உண்மையே. ஆனால் அதற்கு ஆயிரமடங்கு தண்டனை யடைந்துவிட்டேன். அதற்கு முன்பு முதலே உன்னுடைய அக்கிரமமான கொடுமைகளையெல்லாம் எவ்வளவோ சகித்துக்கொண்டிருந்தேன். என்மனம் ஒப்பாத கஷ்டமெல்லாம் பட்டு உனக்கு எவ்வளவோ உதவிசெய்தேன். உனக்கு எள்ளளவும் நன்றி கிடையாது. உன்னிடம் நான் அனுபவிக்கும் கஷ்டம் கடவுளுக்கே பிரீதி. என்னால் கூடியவரையில் பொறுத்தேன். இனி யொருவினாடியேனும் என்னால் பொறுக்கமுடியாது. எது எப்படியானாலும் சரி, இனி நான் உன்கூட வாழமுடியாது" என்று ஒரே தீர்மானமாய்க் கூறிவிட்டாள்.

தேவ:—சரி. உன் நீண்ட பிரசங்கத்தைக் கேட்டேன். இந்த அற்பமான ஆயிரம் பவுனுக்காக நான் உன்னைக்

கைவிடமாட்டேன். நீ சட்டப்படி என் மனைவி. நீ எங்கு சென்றாலும் நான் உன்னைவிடேன். உன்பெரிய தந்தைவீட்டில் அடைக்கலம் பெற்றாலும் நீ எந்த உள் ளறையிலிருந்தாலும் நான் நுழைந்து பிடித்துக் கொண்டு வருவேன். இவ்வளவே என் தீர்மானம். நாளை காலை யந்தக் கிழப்பயலுக்கு இதே பதிலை எழுத வேண்டியதுதான் என் முதல்வேலை. இனி சயனத்திற் குச் செல்லவேண்டியதே.

தெய்வ:—"நீ வேறு அறையில் நான் வேறு அறையிலேயே சயனித்துக் கொள்ளவேண்டும். இனி நான் உன்னோடு ஒரே அறையில் சயனிக்கேன்" என்று தீரத்தோடு கூறினாள்.

தேவராயன் மிக்க குரூரமான முணமுணப்போடு அப்படியே யாகட்டும் என்றுகூறிக்கொண்டே தன் அறைக் குச் சென்றான்.

தெய்வயானை தன் அறைக்குச் சென்றவள் படுக்கைக் குச்செல்லச் சற்றும் ஆயத்தப்படாமலே நாற்காலியிலுட் கார்ந்து சிந்தனையிலிருந்தாள்.

இனி யவனோடிருக்கலாகாது. அவன்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்வதே சரியென்று தீர்மானித்துக் கொண் டாள். அதற்கு ஒரு வழியே யிருக்கிறது. ஆயினும் மிக்க அபாயமானது. சற்று முன்னடி இவளே யதைச்செய்த தென்று அவன் அறிந்துகொண்டாலோ, உடனே அவளு டைய பாங்கரமான இரகசியத்தை வெளியிட்டு அவளுக்குத் தீங்கு செய்துவிடுவான். இவர்கள் அன்று திடீலென்று அம் மாளிகையை விட்டு இரவில் ஓடியபின் நேராய் பருதிபுரம் சென்றார்கள். பிறகு இவள் தன் கள்ளக்காதலனை யந்தவீட் டின் தண்ணீர்த்தொட்டியில் மூடிவிட்டு வந்த சங்கதியை

அவன் எப்படி யறிந்துகொண்டானென்பதை யன்றிரவு நடந்த சச்சரவில் அவனே கீழ்க்கண்டபடி கூறினன். எவ்வாறெனின்:—

"நாம் பருதிபுரம் சேர்ந்ததே வேலைக்காரருக்குச் சேரவேண்டிய கூலியை யனுப்பிவிட்டு அவர்களைச் செல்லும்படி எழுதியபின், நான் ஒரு விஷயமாய் இரத்தினபுரிக்குச் சென்று இரண்டு நாள் தங்கிவர நேர்ந்தது. அச்சங்கதியைக் கேட்டதே நீ நான் அங்கு சென்றால் என்னைப் பிடித்துக் கொள்வார்களென்று பயப்பட்டபோது, நீ எனக்காக மட்டும் பயப்படாமல் உன் விஷயம் எதுவோ எனக்குத் தெரிந்துவிடும் என்று பயந்தே அப்படி அளவுமீறி அபிநயம்செய்கிறுயென்று என் மனதிற்பட்டது. அதோடு நாம் மூடிவிட்டுவந்த வீட்டினருகிற் செல்லவேண்டாமென்று நீ என்னைப் பயமுறுத்திய மாதிரியால், நான் எங்கே பார்த்துவிடுவேனேயென்று நீ பயப்படும் வஸ்து வீட்டிற்குள் இருக்கிறதென்று என் மனதிற்பட்டது.

ஆனல் நான் அத்தகைய விபரீதத்தைக் கண்டுபிடிப்பேனென்று என் மனதில் தோன்றவில்லை. உனக்கு யாரோ கள்ள நாயகன் இருக்கிறுனென்றும் அவனிடமிருந்து வந்த கடிதங்களெல்லாம் வீட்டி லிருக்கிறதென்றும் கருதினேன். அதன்படி வீட்டிற்குச் சென்று உன் கைப் பெட்டி முதலிய யாவும் சோதித்தும் ஒன்றும் அகப்படாததால் எங்கும் சோதித்தேன். தண்ணீர்த் தொட்டியின் மேல் பாரமான பெட்டிக ளிருக்கவே அதைத் திறந்தவுடனே சவத்தைக் கண்டேன். அப்போது சவத்தின் முகம் அதிக மாறுதலடையாம லிருக்கவே ஆள் யாரென்று தெரிந்துகொண்டேன். அத் தொட்டியிலேயே நூலேணியைக் கண்டேன். அதோடு நாம் அவசாமாய்ப் புறப்பட்ட

இரவு நீ அடைந்திருந்த கலவரமும் மோதிரம் விழுந்துவிட்ட தென்று அதைத் தேடுவதுபோல் பாசாங்கு செய்ததும் உன் மற்ற நடக்கைகளும் நினைவிற்கு வந்தன. உடனே எல்லா சங்கதியும் தெரிந்துவிட்டது.

அதன்பிறகு தான் பருதிபுரத்திற்குத் திரும்பிவந்த தும், உன் பிரியமாய் நீயே முதலில் நெறிதவறி நடந்து கொண்டவரையில் என் அனுகூலத்திற்காக என் இன்னொரு முறை யதேமாதிரி செய்விக்கலாகா தென்று சிந்தித்தேன். அதன்மேல்தான் யோசனை செய்து நீ இளவரசனுக்கு உன் காதலை யளித்து எனக்கு அந்த மன்னுப்புப் பத்திரத்தை வாங்கித் தந்தால் உன் குற்றத்தை மறைப்பதாக வாக்களித் தேன். நீ யவ்வாறே செய்தபின், உன் கள்ளக் காதலன் சவத்தைப் புதைத்தேன்" என்றான்.

இதை வெளியிட்டுவிடுவா னென்ற திகில் தெய்வயானைக் கிருந்தாலும் அதை வெளியிடாதபடி அவனை மயக்க அவ ளுக்கு ஒரு தந்திரம் தோன்றியது. ஆகையால் எப்படி யாயினும் சரி நம் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வதே சரி யென்று தீர்மானித்துக் கொண்டாள்.

அவள் இரவு இரண்டுமணி வரையில் படுக்கவே யில்லை. அவள் அறைக்குள் சென்றதே தேவராயன் வெளிப்பக்கம் கதவைப் பூட்டிக்கொண்டா னாதலால் தான் சிறைப்பட் டிருப்பதும் அவளுக்குத் தெரியும். தன் காரியத்தைச் சாதிக்கச் சற்றுநேரமாவது அவள் வெளியிற் செல்லவேண் டியதா யிருந்தது. எப்படியாவது அறையைவிட்டு வெளிப் படவேண்டும். கதவிலுள்ள பூட்டு இருபுறங்களிலும் பூட் டக்கூடிய தாகையால் அது உட்பக்கமே கதவில் தைக்கப் பட்டிருந்தது. தெய்வயானை அறை முழுதும் தேடிப் பார்த்து கடைசியில் ஒரு கத்தி யகப்படவே யதைக்கொண்டு

கதவைத் திறந்துகொண்டு வேறொரு அறைக்குச் சென்று, அங்கிருந்த கடிதம் முதலிய எழுது கருவிகளை யெடுத்துக் கீழ்க் கண்டபடி யொரு கடிதம் வரைந்தாள்:—

"கடந்த ஜூன்மாதம் ஒரு செல்வப் பிரபுவின் குமாரனாகிய சந்திரன் என்பவனைக் கொன்று நாட்டைவிட் டோடிவிட்டவனும், மரண விசாரணையில் கொலையாளி யென்று தீர்மானிக்கப்பட்டு நீதிக்கு மறைந்து ஒளிந்துகொண் டிருப்பவனுமாகிய தேவராயன் என்பவன் இப்போது வெளிப்பேட்டையி லிருக்கும் வாசுதேவ நிலயம் என்ற மாளிகையில் பொன்னுசாமிப் பின்ளை யென்ற கள்ளப் பெயரோடு வசித்து வருகிறான். அவனைப் பிடிப்பதாயின் மிக்க ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் அவன் மிக்க தந்திரசாலியாகிய அசாத்தியப் பேர்வழி. அதோடு அவ் வீட்டிலிருந்து அவன் தப்பித்துக்கொண்டு போய்விட பல வழிக ளிருக்கின்றன. அவன் இங்கிருக்கும் சங்கதி எப்படி தெரிந்ததென்று அவன் அறியலாகாது. எக் காரணத்திற்கும் இக்கடிதத்தை யவனுக்குக் காட்டலாகாது. இது சத்திய மல்லவென்று தெரிந்தால் பிறகு உங்கள் இஷ்டப்படி செய்து கொள்ளுங்கள்.

ம-ா-ா-ஸ்ரீ, பிரதம நியாயாதிபதி யவர்கட்கு,

இரத்னபுரி"

இக்கடிதத்தை யெழுதி முடித்தபின் தன் வேலைக்காரியின் அறைக்குச் சென்று அவள் கணவனையெழுப்பி அவனிடம் அதைக்கொடுத்து உடனே கொண்டுபோய்த் தபாற் பெட்டியிற் போடச்செய்தாள். அவன்கையில் காசு கொடுக்கவே அச்சங்கதியை இரகசியமாய்க் காப்பாற்ற அவன் ஒப்புக்கொண்டான்.

தன் வேலைமுடிந்ததே தெய்வயானை அந்த அறையி லிருந்து வெளிச்செல்லும்போது யாரோ மேல்மாடியிலிரு ந்து மெதுவாயிறங்கிவரும் சத்தம் கேட்டது. அந்த ஆள் தன் கணவனாகவாவது அல்லது வீட்டில் வந்திருக்கும் புது மனிதனாகவாவது இருக்கவேண்டும். கணவனானால் தான் ஏதோ கெடுதி செய்யவே இந்த அகாலத்தில் வெளிவந்த தாய்க் கருதுவான். மற்ற மனிதனாயிருந்தாலும் தான் கண்ட சங்கதியைத் தன் நண்பனிடம் (தேவராயனிடம்) வெளியிடுவான். ஆகையால் சட்டென்று கைத்தீபத்தை யணைத்துவிட்டு தாழ்வாரத்தின் ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டாள்.

சற்றுநேரத்திற்குள் அந்த ஆள் கீழேவந்து மெதுவாய் போஜன அறைக்குள் சென்றான். இவன் வந்திருக்கும் மனி தனே யாகவேண்டும் என்று தெய்வயானை கருதினாள். "என்னத்திற்காக அவன் இந்நேரத்தில் அங்கு செல்ல வேண்டும்? கொள்ளை யடிக்கவோ? அப்படியாயின் யவன் தன்னைப் பார்த்துவிட்டவர்களைக் கொல்லத் துணிந்துவிடு வான் " என்று கருதினாள்.

அச்சமயம் போஜன அறைக்குள் சென்ற அம்மனிதன் ஒரு இராந்தல் வெளிச்சத்தைக் காட்டினான். தெய்வயானை யெட்டிப் பார்க்கப் பயந்து பேசாம லிருந்தாள். அம்மனி தன் "சாராயங்கள் இருக்கும் அலமாரி பூட்டப்பட்டிருக்கா தென்று நம்புகிறேன்" என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான்.

அவன் குரலைக் கேட்டதும் முன்பு வந்ததும் வீதியில் நின்று பேசிய மனிதனே யவன் என்று தெரியவந்தபோதி லும், இதற்கு முன்பே இக்குரலை யெங்கோ கேட்டிருப்பது போல் அவள் புத்தியிற் பட்டது. அவள் தேகம் நடுங்கி

யது. ஏதோ ஓர் பயங்கரவிஷயம் தன்முன் இருப்பதுபோல் தோன்றியது.

சே! இவன் யார்தான் என்று பார்க்கவேண்டும் என ஆவல் உண்டாயிற்று. என்ன சமாதானம் கூறியும் அவள் மனம் அவன் உருவத்தைக் காணவேண்டுமென்றுகொண்ட ஆவல் அதிகமாயிற்றேயன்றி குறையவில்லை. துணிந்து எட்டிப் பார்த்தாள். நேயர்களே அவள் அவ்வாறே பார்த்தவுடன், அவன் அன்றிரவு தன் கள்ளக்காதலன் புதைக்கப் பட்ட சவக்குழியை வெட்டிய கோர உருவமுடையவனென்றறிந்ததும் பிரமித்து நின்றாள்.

---

## 46 - வது அத்தியாயம்

தெய்வயானை யம்மனிதன் சவக்குழி வெட்டியவன் என்றறிந்ததே அவள் மனதி லுண்டான துயரம், கலவரம், பயம் முதலியவைகட்கு அளவேயில்லை. அவனுடைய உண்மையான பெயர் முதலிய ஒரு விவரமும் அவளுக்குத் தெரியாது. ஆயினும் அத்தகைய மனிதன் தன் கணவனுக்கு நண்பனென்றால் இவர்களது கூட்டுறவு மிக்க இழிவும் அக்கிரமுமாகிய செய்கையால் உண்டாயிருக்க வேண்டுமேயன்றி வேறில்லையென்று உணர்ந்தாள்.

அவன் கோரரூபத்தைக் கண்ட நிமிடமே யவள் அலறிக் கூவிவிட்டிருப்பாள். ஆனால் பயமும் திகிலும் மனக் குழப்பமும் அதற்குத் தடையா யிருந்தன. அதற்கிடையில் அம்மனிதன் அலமாரி யருகிற் சென்று அதைத் திறந்ததும் உள்ளேயிருந்த ஒரு பெரிய புட்டியை யெடுத்துப் பார்த்து "பேஷ் போதும்" என்று அதில் நிறையவிருந்த சாராயத்தில் திருப்தியாய்க் குடித்துவிட்டு மீதி சாராயத்தோடு புட்

டியை யிருந்த விடத்திலேயே வைத்துவிட்டு வந்தவழியே தன் சயன அறைக்குச் சென்றான்.

அவன் சென்று சற்றுநோங்கழித்து நிர்ச்சந்தடியா யிருக்கையில் தெய்வயானை மெதுவாய்த் தன் படுக்கை யறைக்குச் சென்று, கதவிலிருந்த பூட்டை முன் இருந்தது போல் ஆணிகளை முடுக்கித் தைத்துவிட்டு சயனித்துக் கொண்டாள்.

மறுநாள் அதிகாலையில் தேவராயன் தன் மனைவி யறைக்குள் வந்ததும், அவள் முகத்தில் இரவு இருந்தது போல் கோபம் வெறுப்பு ஒன்றுமில்லாமல் சாந்தமா யிருப் பதைக்கண்டு மிக்க சந்தோஷமடைந்து, "என்? இப்போ தென்ன சமாதானமோ விரோதமோ?" என்றான்.

தெய்வயானை:—நமக்குள் எப்போதும் சமாதானம் இருப் பதே நலம்.

தேவராயன்:—நீ சிந்தித்துப் பார்த்துக் கடைசியில் இந்தத் தீர்மானத்திற்கே வருவாயென்றே கருதினேன்.

தெய்வ:—ஆம். மேலும் நமது இரகசியங்கள் நாம் ஒரு போதும் விகல்பப்படக்கூடாதவிதமா யிருக்கிறது. அதோடு இதுகாறும் உனக்கு எவ்வளவோ உதவி களைச் செய்து, நான் அற்ப உதவியாவது செய்யக் கூடிய நிலைமையி லிருக்கிறவரையில் ஒருசமயம் உமக்கு ஏதாவது இக்கட்டு நேர்ந்தால் நான் அச்சமயம் உம் மைக் கைவிட்டேன் என்ற பெயர் எனக்கு வரக் கூடாது.

தேவ:—நீ யெந்த விஷயத்தைப்பற்றி கூறுகிறாய்?

தெய்வ:—இப்போது எவ்வளவோ பிரயாசையின்மேல் இள வாசனிடம் அப்பத்திரத்தை யெழுதி வாங்கினேன்.

சமயம் நேர்ந்தால் அதைத் துணிந்து உபயோகிக்க வேண்டியதுதானே?

தேவ:—ஆம். ஆனல் மிக்க அடக்கமாகவும், சாமார்த்தியத்தோடும், தக்க ஆசாமியே அதை யுபயோகிக்க வேண்டும். இன்றேல் எனக்குப் பிராணபத்தாய் முடியும்.

தேய்வ:—உம்மை யத்தகைய ஆபத்தில் கைவிடுவேன் என்று மட்டும் கனவிலும் கருதவேண்டாம். ஏதோ உமது நடக்கையால் ஒவ்வொருசமயம் அதிக கோபம் வந்தாலும் என் நெஞ்சம் இரக்கமற்ற கன்னெஞ்சமல்ல. அதிலும் இரவு நான் போய் அத்தகைய சந்தர்ப்பத்தில் என் பெரிய தந்தையையே சந்தித்த போது என்மனம் எவ்விதமான வேதனைப்பட் டிருக்குமென்பதை நீரே சிந்தித்துப் பார்க்கலாம்.

தேவ:—ஆம் ஆம். உண்மையாகவே நான் இரவுகொஞ்சம் அதிகமாய் ஓயின் அருந்திவிட்டதால் நிதானமின்றி ஆத்திரப்பட்டுவிட்டேன். நீ யென்னை மன்னிக்கவேண்டும். நீ செய்யும் நன்றிகளை நான் இனி யொருபோதும் மறக்கமாட்டேன். இனி யெப்போதும் நாம் பூரண நண்பர்களாகவே யிருக்கவேண்டும். இதுவே யென் கோரிக்கையும் கருத்தும். உன் பிரியமும் அப்படித் தானே?

தேய்வ:—அதைப்பற்றிகூட என்னைக் கேட்கவேண்டுமா? எனக்கு ஆதிமுதலே அந்தப் பிரியமே யென்பதை, நான் எவ்வாறு என் பெரிய தந்தையின் செல்வத்தையும் அன்பையும்கூட பொருட்செய்யாமல் அவர் விருப்பத்திற்கு நேர் விரோதமாக உம்மை மணந்துகொண்

டேன் என்பதைச் சிந்தித்தால், நீரே நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

தேவராயன்:—"போனது போகட்டும். இனி நாம் நண்பரே" என்றான்.

பிறகு இருவரும் போஜனகூடத்திற்குச் சென்றார்கள். தெய்வயானை யதுமுதல் தன் கணவனிடம் மிக்க அன்போடு நடந்துகொள்பவள்போல் அபிநயித்து வந்தாள். போஜனம் முடிந்தபின் பகற்போஜனத்திற்கு ஏற்பாடு செய்வதற்காக சமையலறைக்குச் சென்று, தன் வேலைக்காரனைக் கண்டு கடிதத்தைச் சரியாய்த் தபாலிற் போட்டுவிட்டானாவென்று தெரிந்துகொண்டு "வீட்டில் ஏதேனும் திடுக்கிடத் தக்க சம்பவம் நேர்ந்தாலும் நீயும் உன் மனைவியும் சற்றேனும் கலவரமடைந்த முகக்குறியைக் காட்டலாகாது. அச் சங்கதியைப்பற்றிக் கருதலுமாகாது பத்திரம்!" என்று எச்சரிக்கை செய்தாள்.

சுமார் நடுப்பகலாயிற்று. அப்போது வேலைக்காரன் புருடனும் மனைவியும் சம்பாஷித்துக்கொண் டிருந்த அறைக்குவந்து, "பாஞ்சாலநாட்டிலிருந்து ஒரு பெரிய மனிதர் வந்திருக்கிறார். அவர் இப்போதுதான் வந்தாராம். வாசுதேவப் பிரபுவிடமிருந்து கடிதங்கள் கொண்டுவந்திருக்கிறாராம். பொன்னுசாமிப்பிள்ளை யவர்களைக் காணவேண்டுமென்று கூறுகிறார்" என்றான்.

தெய்வயானை, சரி; விவகாரம் நடக்குங்காலம் நெருங்கிவிட்டதென்றுதெரிந்து கொண்டாள். தேவராயனுக்கு விவகாரம் சரியாயில்லையென்ற சந்தேகம் மட்டும் உண்டாயிற்று. அதன்மேல் ஆட்காரனை நோக்கி"அவன் எம்மாதிரிமனிதன்? நான் வீட்டிலிருப்பதாய்க் கூறிவிட்டாயோ?" என்று கேட்டான்.

வேலையாள்:—"நான் தெரியாதென்றுமட்டுமே கூறினேன். அவன் மரியாதையான பெரிய மனிதனுகவே காணப் படுகின்ருன். குள்ளமாய் மெலிந்ததேகியா யிருக்கி ருன்" என்ருன்.

தேவராயன் மனக்கலக்கத்தோடு தன் மனைவியை நோக்கி "அவனைப்போய்க் காணலாமென்று நினைக்கிருயா? வாசுதேவப்பிரபு சாதாரணமாய்த் தபால்மூலம் கடிதம் வரையாமல் ஒரு ஆளை யனுப்பினுனென்பது ஆச்சரியமாய்த் தோன்றுகிறதல்லவா? ஏனெனில் எங்களுக்குள் அத்தகைய விசேஷ சங்கதிக ளொன்றுமில்லையே" என்ருன்.

தெய்வ:—"எனக்கொன்றும் தோன்றவில்லை. ஒரு சமயம் இது ஒரு தந்திரமாயிருந்தாலு மிருக்கலாம். ஆயி னும்......" என்பதற்குள்,

கணவன்:—"சரி யெப்படியாயினு மாகட்டுமென்று துணிந் தே பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு ஆட்காரனை நோக்கி "அந்த ஆளை யுள்ளே கொண்டுவந்து விடு" என்ருன்.

வேலைக்காரன் சென்றதே அவன் தன் ஜேபியி லிருந்த் ஒரு சாவியை யெடுத்து தெய்வயானையிட மளித்து, "ஒரு சமயம் ஆபத்தாய்த் தோன்றினுல் உடனே சென்று என் கைப்பெட்டியைத் திறந்து இளவாசன் பத்திரத்தையெடுத்து ஜாக்கிரதையாய் வைத்துக்கொள். ஏனெனில் வீட்டைச் சோதித்தால் அது அவர்களிடம் சிக்கிக்கொள்ளும். ஆ! அந்தப்பயல் சிங்காரம் இருக்கிருன் ——" என்ருன்.

தெய்வ:—"அவனைப்பற்றியென்ன? அவனுக்கென்ன ஆப த்து நேரக்கூடும்?" என்ருள்.

தேவ:—"ஆம். என்னைப் பிடித்துக்கொண்டால் பிறகு வீட் டைச் சோதிக்கமாட்டார்கள். ஆனல்......" என்ப தற்குள்,

வேலைக்காரன் வந்திருக்கும் மனிதனை அறைக்குள் கொண்டுவந்து விட்டான். புருடனும் மனைவியும் கலவரத்தோடு அவனை நோக்கினார்கள். ஆனால் அவன் முகத்தில் சற்றேனும் பயப்படக்கூடிய தோற்றம் ஒன்றும் புலப்படவில்லை. தெய்வயானைமட்டும் அவன் போலீஸ் உத்தியோகஸ்தனேயென்று தெரிந்துகொண்டாள்.

வந்த மனிதன் பூரணசாந்தத்தோடு பொன்னுசாமிப் பிள்ளையை நோக்கி,

"அய்யா, தேவராயப்பிள்ளையே! நான் என் கடமையைச் செய்யவேண்டியிருப்பதற்காக விசனிக்கிறேன். ஆனால் நீர் தடுக்க முயல்வதில் பயனில்லை. ஏனெனில் என் ஆட்கள் வீட்டைச் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள்" என்றான்.

அதைக்கேட்டதே தெய்வயானை மெய்யாகவே பெருந் திகிலும் துயரமுமடைந்தவள்போல் "அய்யோ தெய்வமே" என்று அலறினாள்.

தேவராயன் நீபோய் நான் கூறியதைச் செய்யெனக் குறிப்பாய் அவளையுற்று நோக்கிக்கொண்டே "நீ யெதற்கும் கலவரப்படவேண்டாம், நீ யுன் அறைக்குச் செல்" என்றான்.

அப்போது போலீஸ் உத்தியோகஸ்தனும், "ஆம் அம்மா. தாங்கள் உள்ளே செல்லுங்கள்" என்றான்.

தெய்வயானை யவன் போலீஸ் உத்தியோகஸ்தனென்றுமட்டும் தெரிந்துகொண்டாளே யன்றி அவன் முன் தன்னிடம் வந்த தபால்காரனான நமது செல்வநாதனே யென்றுமட்டும் அறிந்து கொள்ளவில்லை. அவள் அவனை நோக்கி இன்னும் துயரப்படுபவள்போலவே அபிநயம் செய்துகொண்டு "நீர் என் கணவனைக்கூடவே யழைத்துக் கொண்டு போகப்போகிறீரோ?" என்றாள்.

செல்வ:—"தாங்கள் வேண்டுமாயின் இவரிடம் மறுபடி பேசலாம். இவர் பெரிய மனிதனைப்போல் நடந்து கொண்டால் உடனே அழைத்துச் செல்லவேண்டு மென்று அவசரமில்லை" என்ருன்.

தெய்வயானை யுடனே சென்று தன் கணவன் பெட்டியைத் திறந்து பத்திரத்தை யெடுத்துப் பத்திரமாய்த் தன் மடியில் வைத்துக்கொண்டு, "இனி என்வஞ்சம் பூரணமாய் நிறைவேறிய மாதிரியே. இன்னும் கடைசிவரையில் அவனுக்குப் பூரணமாய்நம்பிக்கை காட்டியே காரியத்தை முடித்துக் கொண்டு நாம் விடுதலை யடையவேண்டும்'' என்று தனக்குத் தானே துணிகரத்தோடு கூறிக்கொண்டாள்.

அவள் சற்றுநேரம் தன் அறையிலேயே யிருந்து பிறகு தன் கணவன் இருக்கும் அறைக்குச்சென்று மிக்க துக்க மனுபவிப்பவள்போல் நடித்தாள். அப்போது இன்னும் வேறு இரண்டு போலீஸ்காரர்களும் அங்கிருக்கக் கண்டாள்.

தேவராயன் செல்வநாதனை நோக்கி "நான் என்மனைவியிடம் இரண்டொரு வார்த்தை இரகசியமாய்ப் பேசவேண்டும்'' என்ருன்.

செல்வ:—"ஆகா இதே அறையில் பேசலாம்'' என்ருன்.

தேவராயன் மனைவியிடம் வந்து பத்திரத்தை யெடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டாயாவென்று கேட்டுக் கொண்டு, "வந்திருப்பவர்களில் தலைவனுனவன் பிரக்கியாதி பெற்ற துப்பறியும் செல்வநாதன். ஆனுல் நான் இருப்பதை யெப்படி யறிந்து கொண்டீர்களென்ருல் அதைக்கூற மறுத்துவிட்டான், ஒரு சமயம் பலதரம் உன்னைக்கண்டு நீ யாரென்பதை மட்டும் தெரிந்துகொண்டிருக்கலாகும். எப்படியோ நடந்துபோனதைப் பற்றி பேசுவதில் பயனில்லை. இனி நீ யிங்கு தனியாயிருக்க மாட்டாயென்று கருதுகிறேன்'' என்ருன்,

மனைவி:—ஆம். நீர் கொண்டுபோகப்படு மிடத்திற்குச் சமீ பத்தில் ஒருவிடம் பார்த்துக்கொள்வேன்" என்றாள்.

தேவராயன் "ஏன் உன் பெரிய தந்தையிடம் போய் இருப்பதாயின் நலமே. இளவரசன் அங்கு அடிக்கடி வருவான். அவனைச் சந்திப்பாய்."

தெய்வ:—"அப்படி நேர்ந்தால் அவன் பத்திரத்தின்படி நிறைவேண்டுமென்று கட்டாயப்படுத்தினாலென்ன?" என்றாள்.

தேவ:—ஆ! அவ்வளவு செய்வதானால் போதும். அப்படியானால் நீ பிரபுவின் வீட்டில் போயிருப்பதே நலம்!

தெய்வ:—செய்வதானாலா? கட்டாயம் செய்தே தீருவேன்.

தேவ:—"ஆனால் அவசியம் அங்கே செல். நான் இரண்டொரு வாரங்களில் விடுதலையடைந்து திரும்பி வந்துவிடுவேன். அப்போது நான் நன்றியற்றவனல்லவென்று உனக்கு நிரூபிக்கிறேன்" என்றான்.

தெய்வ:—நான் செய்யவேண்டிய தின்னும் ஏதேனுமுளதோ?

தேவ:—"ஒன்றுமில்லை. அந்தச் சிங்காரம் என்பவனை நீ சந்திக்கவேண்டாம். வேலைக்காரரிடம் சங்கதி சொல்லிவிடு" என்றான்.

தெய்வ:—"அப்படியே. நான் இன்றைக்கே இதைவிட்டுப் போய்விடுவேன். நாளைக்கு உங்களை வந்து காண்கிறேன்" என்றாள்.

உடனே யிருவரும் ஆலிங்கனம் செய்துகொண்டார்கள். தெய்வயானைத் தன் கண்களை முன்தானையால் துடைத்துக்கொண்டே அறையை விட்டுச் சென்றாள். சற்று நேரத்திற்குள் போலீஸ்காரர்கள் முன்னமே ஆயத்தமாய்க்

கொண்டுவந்திருந்த ஒரு வண்டியில் தேவராயனை யேற்றிக் கொண்டு குற்றவாளிகள் வைக்கப்படும் சிறைச்சாலையை நோக்கிச் சென்றார்கள். ஒருமணிநேரத்திற்குள் தேவராயன் ஒரு தனியறையில் சிறைவைக்கப்பட்டான்.

அவன் ஆதிமுதல் தெய்வயானை தன்மேல் கொண்டிருக்கும் காதலால் தான் செய்யும் கொடுமைகளையெல்லாம் அப்போதைக் கப்போது மறந்து நம் பிரியப்படி செய்கிறாள் என்ற உண்மையை யறிந்திருப்பதால் இப்போதும் "பயத்தாலும் தந்திரத்தாலும் நாம் அவளை வசியப்படுத்தி விட்டோம். எப்படியும் விடுதலையடைந்து வந்துவிடுவோம். அதன்பிறகு நாம் பயப்படவேண்டியது ஒன்றுமில்லை. அப்புறம் அவள் நம்மிடம் பூரண அடிமைபோல் நடந்து கொள்ளவேண்டியதே. அவளுடைய பயங்கர இரகசியம் நம்மிடம் சிக்கியிருக்கிறதாகையால் என்றைக்கும் நாம் ஆட்டுகிறபடி யவள் ஆடவேண்டியவளே. நமக்கிருக்கும் இந்த ஒரு பயம் ஒழிந்துபோக இச்சம்பவம் நேர்ந்ததும் ஒரு நல்லகாலமே'' என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டு நிம்மதி யடைந்தே யிருந்தான். தெய்வயானை நடித்தமாதிரியால் அவள்மேல் அவனுக்கு எள்ளளவு சந்தேகமு முண்டாகவில்லை.

தேவராயன் கொண்டுபோகப்பட்ட ஒருமணி நேரம் கழித்து தெய்வயானை வேலைக்காரன் மூலமாய் சிங்காரம் என்பவனுக்குச் சங்கதி யறிவித்துவிட்டு வேலைக்காரருக்குத் திருப்திகரமாகப் பரிசளித்து அம்மாத முழுதுக்கும் சேரவேண்டிய சம்பளத்தோடு அதிகமாக ஒருமாத சம்பளமும் அளித்து, ஒருவண்டி பேசிவரச்செய்து தன் பொருள்களை யெடுத்துக்கொண்டு தன் பெரிய தந்தையாகிய சுகசிங்கம் பிரபுவின் மாளிகைக்குச் சென்றாள்.

# 47-வது அத்தியாயம்

இரத்தின புரியின் மேற்கு பாகத்தில் மிக்க உன்னதமான ஒருமாளிகையின் நேர்த்தியாய் அலங்காரம் செய்யப்பட்டிருந்த ஒரு அறையில் மூன்றுபேர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யாரெனில், சுமார் 41-வயதுடைய பிரேமநாதம் பிரபு ஒன்று, சுமார் 38-வயதுடைய அவர் மனைவி பங்கஜம்மாள் ஒன்று, அச்சீமாட்டியின் தமக்கை குமாரத்தியாகிய ஜெகதீஸ்வரி ஒன்று. இக்கன்னிகைக்கு இப்போது 19-வயதாகிறது. இவளுடைய சிறுவயதிலேயே இவள் பெற்றோர் பரலோக பிராப்தியடைந்தனர். ஆனால் இவள் தந்தையின் சொத்து இவளுக்குப் போதுமானதிருக்கிறது. ஆயினும் பிரபுவும் அவர் மனைவியும், தங்களுக்குச் சந்ததியின்மையால், அவளையே தங்கள் சொந்தப் புதல்வியாக மதித்து மிக்க அன்போடு அவளை வளர்த்து வந்தார்கள்.

இராஜேஸ்வரி மிக்க அழகுடையவள். அவளுடைய கூந்தல் கார்மேகத்தையும் வெட்கச்செய்வதாய் நீட்சியில் நெடுங்கோரையையும் பளபளப்பில் கருஞ் சாந்தையும் வென்று செழித்து முனை வெடிக்காத உரோமங்களை யுடையதாயிருந்தது. அதனால் சூற்கொண்ட மேகத்தின் கீழ்த் தோன்றும் சந்திரனை யொத்துப் பிரகாசித்தது. அவளது நெற்றி பளபளப்பாய் மாசில்லா வாடிபோல் விளங்கியது வில்லைப்பழிக்கும் புருவங்களிரண்டும், பாந்து நீண்டு பிரகாசம்பொருந்திய கண்கள் தங்களைக் காணும் ஆடவர் நெஞ்சை யடியோடபகரித்த விஷயத்தை யொத்த தங்கள் வலைகளை வீசாவண்ணம் காவல் இருக்கும் விற்கள் என்றே

கூறத்தகும். அத்தகைய நயனங்கள் ஒருசமயம் இரண்டும் ஒன்ருய்க் கூடிக்கொண்டால் அந்த விற்களால் அவற்றை யடக்க முடியாமற் போகும். அந்தோ அப்போது அவற்றைக் காணும் ஆடவர்கள் உள்ளம் என்ன பாடுபடும்! ஆகையால் அவற்றை யொன்ருய்ச் சேரவொட்டாது காவல் காக்கும் நாசி இணையற்றதே. செவ்வரக்கையும், இங்குலிகத்தையும், செம்முருக்கமலரையும் தலை நாணச்செய்யும் அதரம், கண் கூசும்படி ஜொலிக்கும் முத்துக்கோர்வை யன்ன தந்தபந்திகளை யாரேனும் பார்த்து கண்ணேறு படாவண்ணம் மிக்க ஜாக்கிரதையாய் பாதுகாத்துக்கொண்டிருந்தன. அவளுடைய மற்ற அவயவங்களைப்பற்றி நாம் கூறவேண்டுமாயின் இடம் போதாது

அவளுடைய பெரியதாய் அவள் கல்வியைப்பற்றியும் ஒழுக்கம் நடக்கை யோக்கியதை முதலியவற்றைப்பற்றியும் மிக்க சிரத்தை யெடுத்துக்கொண்டபடியால் அவள் நல்ல கல்விப் பயிற்சி யடைந்ததோடு உயர்குலப் பெண்ணுக்கு வேண்டிய சகல ஒழுக்கங்களிலும் நடக்கைகளிலும் நல்ல பயிற்சி யடைந்தாள். அவள் சூது வாது,கள்ளங்கபடு, துர்ச்சிந்தனை, பொருமை முதலிய ஒன்றையு மறியாது களங்கமற்ற உள்ளமுடையவளா யிருந்தாள்.

இவர்கள் பொருக்கான சிலரைத்தவிர அதிகமான நண்பரைச் சேர்ப்பதில்லை. வெளியிலும் ஆடம்பரமான விருந்துகள் முதலியவற்றிற்குச் செல்வதில்லை. இராஜமாளிகைக்குச் செல்லக்கூடிய அந்தஸ்தும் கௌரவமும் உடையவர்களேனும் அங்கு செல்வதேயில்லை. ஏனெனில் அச்சீமாட்டிக்கு இளவரசன் மேல் மிக்க வெறுப்பு. ஏனெனில் அவன் அச்சீமாட்டியின் தமக்கைக்குப் பெருந்தீங்கைச் செய்துவிட்டான். அம்மாது, அவன் செய்த துரோகத்தாலேயே

மனமுடைந்து பிறகு அரிய நண்பர்கள் என்ன தேற்றியும் பயனின்று இளவயதிலேயே மடிந்தாள். ஆயினும் அச்சீமாட்டி பகிரங்கமாய் அவ்வெறுப்பைக் காட்டுவதில்லை. இதுமட்டுமல்ல. இளவரசன் தன்னிடமே தகாதமாதிரி நடக்கத் தொடங்கித் தான் மிக்க கோபத்தோடும் வெறுப்போடும் அவனைக் கண்டித்து இகழ்ந்துவிட் டிருக்கிறாள்.

அப்படி யிருந்தும் இளவரசன் தங்கையாகிய சுந்தராங்கி இராஜகுமாரிமட்டும் அப்போதைக் கப்போது இவர்கள் வீட்டிற்கு வருவதுண்டு. இவர்களிடம் மிக்க அன்பார்ந்த சிநேகிபோல் நடந்து கொள்வதோடு, ஜெகதீஸ்வரியிடம் விசேஷ அன்புகாட்டி நடந்துகொள்வாள். தன் தமையனாகிய இளவரசன் பங்கஜம்மாளின் தமக்கைக்குச் செய்த துரோக சமாசாரத்தை யவளறிந்தவளானதால் அவள் இவர்கள் சமுகத்திலிருக்கும்போது தன் தமையன் பெயரை யொருபோதும் பிரஸ்தாபிப்பதே யில்லை.

இப்போது முன்னாடி கூறவேண்டிய அவசிய விஷயங்களைக் கூறிவிட்டபடியால் இனி கதையைத் தொடங்குவாம்.

முன்கூறியபடி அவர்கள் மூவரும் அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கையில் மணி மாலை நான்குமணி யிருக்கும். மாதரிருவரும் ஏதோ பின்னல்வேலை செய்துகொண்டிருந்தார்கள். பிரேமநாதம் பிரபு அவர்களோடு பேசிக்கொண்டிருந்தார். அச்சமயம் தெருக்கதவை யாரோ தட்டினார்கள். சற்றுநேரத்திற்குள் சுந்தராங்கி இராஜகுமாரி இவர்கள் இருக்கும் அறைக்குள் வந்தாள். இம்மாது பங்கஜம்மாளைப்போல் 38-வயதே யுடையவள். இயற்கையாய் அழகுடையவளே. ஆனால் அந்த இயற்கை வனப்பு பங்கமடைந்துவிட்டதால் செயற்கை வனப்பால் அதைச் சரிப்படுத்திக் கொண்டிருக்கிறாள் என்று காண்போர் உணரலாகும். ஆயி

னும் கெம்பீரத் தோற்றமுடையவள். அவள் வந்து உட்கார்ந்ததும் க்ஷேமசமாசாரங்களைப் பேசி முடித்தபின், பங்கஜம்மாளை நோக்கி "அம்மா! நான் உன்னிடம் ஒரு இரகசிய சமாசாரம் பேசவேண்டும்" என்றாள். இம்மொழிகளைக் கேட்டதும் பிரபுவும் கன்னிகையும் எழுந்து அறையைவிட்டு வெளிச்சென்றார்கள்.

இராஜகுமாரி சீமாட்டியை நோக்கி, கீழ்க்கண்டபடி கூறத்தொடங்கினாள். அச்சங்கதியைப்பற்றி கூறியபோதே அவள் முகம் வாட்ட மடைந்தது.

"அம்மா! நான் கூறப்போவது சுமார் 19-வருடங்களுக்குமுன் நடந்த ஒரு விசனகரமான சங்கதியைப்பற்றி. அதாவது சுமார் 19-வருடங்களுக்கு முன் ஒருநாள் இரவு நான், அப்போ நீ,உன்தந்தை, உன் தமக்கை மூவரும் வசித்துக்கொண்டிருந்தவீட்டில் ஒருஆண்குழந்தையைப் பிரசவித்தேன். அக்குழந்தை அப்போது உங்கள் வீட்டிற்குச்சமீபத்தில் வசித்துக்கொண்டிருந்த தாமோதரன் என்ற ஒரு வயித்தியரிடம் வளர்ப்பதற்காகக் கொடுக்கப்பட்டது. நான் அதை மறந்துவிடவில்லை.அப்படி மறந்து விட்டேன் என்று கருதுவதாயின் அது மிருக சுபாவத்திற்குக்கூட ஒத்ததா யிராது. தாயின் இயற்கை யன்பாகிய புத்திரவாஞ்சை யென் மனதைவிட்டு அகன்றதல்ல. ஆனால் நான் அக் குழந்தையைக் காணவேண்டு மென்று முயற்சி யெடுத்துக்கொள்ளவில்லை. ஆகையால் இன்னும் நான் அதைக் காணவே யில்லை. அவமானமும், திகிலும் பயமும் என்னைத் தடுத்தன. ஆகையால் இதுகாறும் என் புத்திரனைக் காணவேண்டு மென்று சிரத்தை யெடுத்துக்கொள்ளவில்லை." என்று கண்களில் கண்ணீர் விட்டுக்கொண்டே கூறினாள்.

பிறகு சற்றுநேரம் மௌனமா யிருந்து தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, "இரவு ஒரு பயங்கரமான கனவுகண்

டேன். நான் ஒரு கோயிலிலிருக்கும் கல்லறைகளில் உல விக்கொண் டிருக்கிறேன். நிலவு நன்ருய்க் காய்ந்துகொண் டிருப்பதால் சவக் குழிகளின்மே லிருக்கும் கற்கள் பளிங்கு கள்போல் பிரகாசித்துக்கொண் டிருந்தன. நான் அங்கு எப்படி சென்றேன் என்பது எனக்கு விளங்கவில்லை. அந் நேரத்தில் தனியே அங்கு என்ன காரணத்திற்காக திரிந்து கொண் டிருக்கிறே னென்பதும் எனக்குப் புலப்படவில்லை. ஆனுல் பனிக்கட்டிகளின் மத்தியில் இருப்பதுபோல் தேகம் குளிரால் நடுங்கியது; அக்குளிர் என் எலும்புகளையும் நடுங் கச் செய்தது. வரவர அந்தவிடத்தில் நான்மட்டும் தனியா யிருப்பதாய்த் தோன்றவில்லை. அந்தச் சவக் குழிகளின் மறைவில் ஆவேசங்கள் உலவுவதுபோல் தோன்றியது. எனக்குத் திகில் உண்டாய் விட்டது ஓடிவிடலாமென்றுல் நகரமுடியவில்லை. கால் கைகள் மரங்கள்போல் இருந்தன. கண்களை மூடிக்கொள்ளலாம் என்றுல் என்னை யறியாத ஏதோ ஒரு சக்தி யென் கண்களை மூடவொட்டாது தடுத் தன.

வரவர ஒரு உயரமான வெள்ளை உருவம் என்னை நோக்கி வந்து என் அருகில் நின்று தன்வெள்ளை முகமூடி யைத்திறந்து இறந்துபோன என் சகோதரி கோமளாங்கி யின் முகத்தைக் காட்டிற்று. ஓ! பங்கஜம்! நான் எவ்வளவு அன்பாய் அவளை நேசித்திருந்தேன் என்பது உனக்குத் தெரியுமல்லவா! எங்களுக்குள் மறைவான இரகசியம் ஒன் றுமே கிடையாது. என் அழிவிற்குக் காரணமான அக்காத லனைப்பற்றிய இரகசியங்கள் யாவும் அவளுக்குத் தெரியும். மிக்க விசனிக்கத்தக்க பரிதாபமான அவள் காதல் விஷய மும் எனக்குத் தெரியும்." என்றுள்.

இம்மொழிகளைக் கேட்ட பங்கஜம் மிக்க வியப்படை ந்தாள். ஏனெனில் சுமார் நான் கைந்து வருடங்களுக்கு

முன் இறந்துபோன கோமளாங்கி என்ற இராஜகுமாரியும் காதலால் துன்பமடைந் திருக்கிருளென்ற சமாசாரத்தை யவள் இப்போதுதான் முதல் முதல் கேள்விப்பட்டாள்.

இராஜகுமாரி மிக்க துயரத்தோடு மறுபடி கூறத் தொடங்கி,

"என் அன்பார்ந்த சினேகியே. என் சகோதரியும் என்னைப்போலவே தன் காதலனை மிக்க அன்போடு காதலித்திருந்தாள். அவளும் என்னைப்போலவே ஒரு மகவை யீன்ருள். ஆனல் அக்குழவி யுடனே இறந்துபோயிற்று. அந்த விஷயங்கள் யாவும் என் தாய் தந்தையர்க்குத் தெரியும். என் சகோதரி அதே துயரத்தால் மனமுடைந்து மடிந்தாள். அவள் தன் மரணத்தருவாயில் புத்திசுவாதீனமின்றி வாய் பிதற்றியபோது என் காதல் விஷயங்களையும் வெளியிட்டுவிட்டாள். பரிதாபமான என் தாய் தந்தையர் அப்போதுதான் தங்கள் குமாரத்திகள் இருவரும் அநியாயமாய் இவ்வாறு அழிந்தார்களென்று தெரிந்துகொண்டார்கள். அந்தோ! அக்காட்சி மிக்க கோரமானது. அதை நினைத்தாலும் என் மனம் நடுங்குகிறது. ஏனெனில் என் தங்கையின் மரணக்காட்சி யிருக்கிறதே அய்யோ கடவுளே! சொல்லமுடியாத கோரக்காட்சி. அவள் ஜன்னியில் வாய் பிதற்றிய விஷயங்கள் மிக்க பயங்கரமானவை" என்று தன் துக்கத்தை யடக்கமுடியாமல் கதறி யழுதாள்.

பங்கஜம்மாள்கூறிய அன்பான வார்த்தைகளால் மனம் சற்று தேறி, "ஓ என் அன்பார்ந்த சினேகியே! என் கதையைக் கூறி முடித்து விடுகிறேன். என் சகோதரியின் ஆவேசம் கூறிய வார்த்தைகள் யாவற்றையும் கூறுவதென்ருல் எனக்கு மிக்க பயமாய் இருக்கிறது. என்னுல் முடியாது. முக்கியமாய் என் புத்திரனைப்பற்றிக் கூறினுள். என் மகன் உயிரோடிருக்கிருனும். நான் புத்திரவாஞ்

சையின்றி யவனைக் கவனிக்காம லிருப்பதைப்பற்றி மிக்க கடிந்துகொண்டாள். அவள் கூறிய வார்த்தைகள் என் நெஞ்சில் காய்ச்சிய ஈய எழுத்துக்களால் வார்ப்படம் ஊற்றிய எழுத்துகள்போல் சுடச்சுடப் பதிந்துவிட் டிருக்கின்றன. ஆகையால் நான் என்னால் கூடிய பிரயத்தனம் செய்து என் மைந்தனைக் கண்டு பிடிக்கவேண்டும். ஆனால் நான் தாயா ரென்று காட்டிக்கொள்ள முடியாது. ஆனால் என் செல்வத்தைக்கொண்டு அவனுக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் யார்மூலமாயாவது நடத்துவேன். இவ்விஷயத்தில் நான் நேராய்த் தலையிடலாகாது.

ஆகையால் நீ இவ்விஷயத்தில் எனக்கு உதவிசெய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். உனக்கு அந்தடாக்டர் தெரியும். இப்போதவர் நல்ல பிரக்யாதிபெற்று நகரில் வசித்துக்கொண் டிருக்கிறார். நீ செய்யும் இவ்வுதவியை நான் என்றும் மறவேன்" என்றாள்.

பங்கஜம்மாள் என்ற சீமாட்டி மிக்க மனவிரக்கமுடையவளாய்,

"நான் உன்னைச் சகோதரிபோல் நேசிக்கிறேன். உன் மனோவியாகூலம் எத்தகையதென்று நான் உணர்கிறேன். நீ இதைப்பற்றிச் சற்றும் கவலை கொள்ளவேண்டாம். நான் எப்படியாவது உன் குமாரனைக் கண்டு பிடிக்கிறேன்" என்றாள்.

இராஜகுமாரி "நான் உன்னைப் பூரணமாய் நம்பியே என் இரகசியங்கள் முழுமையும் உன்னிடம்கூறத் துணிந்தேன்" என்று மொழிந்து சீமாட்டியை யாலிங்கனம் செய்துகொண்டு விடைபெற்றுச் சென்றாள்.

# 47-வது அத்தியாயம்

மேல் அத்தியாயத்தின் இறுதியில் கூறப்பட்ட சங்கதிகள் நடந்த மறுநாள் பகல் ஒருமணியிருக்கும். டாக்டர் தாமோதரம் தன் அழகிய மாளிகையில் போஜன அறையில் உட்கார்ந்துகொண்டு தன் நண்பரான இன்னொரு டாக்டரோடு போஜன மருந்திகொண்டிருக்கிறார். இவர்கள் இருவரும் உள்ளுக்குள் உளவாயிருந்துகொண்டு, வெளிக்கு ஒருவரை யொருவர் புகழ்ந்து கூறிக்கொண்டு பணம் சம்பாதிப்பதில் மிக்க சமர்த்தர்கள். ஏழைகளின் இம்சையை இவர்கள் சற்றும் கவனிப்பவர்களல்ல. செல்வவந்தர்களை வஞ்சித்துப் பணம்பறிப்பதில் கெட்டிக்காரர்கள். இருவரும் தங்கள் விஷயங்களைப்பற்றி பேசி முடிந்தபின் டாக்டர் தாமோதரன் தன் நண்பரை யனுப்பிவிட்டுத் தானும் வெளியில் செல்ல யோசித்துக்கொண்டிருந்தார்.

அச்சமயம் வேலைக்காரன் வந்து "பங்கஜம் சிமாட்டியவர்கள் தங்களைக் காணவேண்டி வந்திருக்கிறார்கள்" என்றான். டாக்டர் "ஆ! பங்கஜம் சிமாட்டியா! இவர்கள் வீட்டில்தான் அந்த.......அன்றிரவு பிரசவித்தது......" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டே அச்சிமாட்டி வந்து உட்கார்ந்திருக்கும் அறைக்குச் சென்றார். சிமாட்டியைக் கண்டதும், "ஆ! நான் தங்களுக்கு அறிமுகமானவனே யென்ற கௌரவமுடையவன் என்றே நம்புகிறேன்" என்றார்.

பங்கஜம்மாள்:—"நான் தங்களைக் கண்டு நெடுநாளாயிற்று. நான் தங்களை யிப்போது காணவந்தது அப்போது நடந்த ஒரு சங்கதியைப் பற்றியே. அது என்ன

வென்று தாங்கள் அறிந்துகொள்வீர்களென்று நம்புகிறேன்" என்றாள்.

டாக்டர்:—ஆ! தாங்கள் கூறுவது என்னவென்று தெரிந்துகொண்டேன்" என்றார்.

ஆனால் உடனே அவருடைய முகம் வாட்ட மடைந்தது. அவர் முகவாட்டத்தைக் கண்ட சீமாட்டி கலவரமடைந்து "அவன் உயிரோ டிருக்கிறானா?" என்று கேட்டாள்.

டாக்டர்:—சீமாட்டியே! இப்போது அவனைப்பற்றி நான் ஒன்றும் கூறமுடியாது. அவன் உயிரோடிருந்தால் இப்போது நல்ல வாலிபனா யிருப்பான்.

சீமாட்டி:—தங்களிடத்தில் ஒப்பிக்கப்பட்ட ஆளைப்பற்றி தாங்கள் இவ்வாறு கூறுவதன் கருத்து எனக்கு விளங்கவில்லை.

டாக்டர்:—சீமாட்டியே நான் கூறுவதைத் தயவுசெய்து சற்று பொறுமையாய்க்கேளும். இன்றேல் வீணான சந்தேகங்களுக் கிடமுண்டாய்விடும். நான் கடவுளறியக் கூறுகிறேன். என்னால் எள்ளளவு கெடுதியாவது அஜாக்கிரதையாவது நேரிடவில்லை. அக்குழந்தை யென்னிடமிருந்து களவாடப்பட்டது.

சீமாட்டி சந்தேகமும் கோபமும் துயரமுமடைந்து "அய்யோ! களவாடப்பட்டதா? அதன் தாய் அதைத்தேடி வந்திருக்கிறாளே!" என்றாள்.

டாக்டர்:—"ஆம். ஆம். சுந்தராங்கி இராஜகுமாரி" என்றதும், அப்போது சீமாட்டியின் முகத்தில் தோன்றிய ஒருவிதக் குறிப்பினால் தான் கருதியது சரியேயென்றுணர்ந்து, "அம்மா அக்குழந்தை என்னிடம் கொடுக்

கப்பட்ட கொஞ்சகாலத்திற்கெல்லாம், ஒருநாள் கடை வீதியில் அந்த இராஜகுமாரி வண்டியில் சென்று கொண் டிருக்கையில் பார்த்தேன். உடனே அன் றிரவு பிரசவித்த மாது இவளேயென்று உணர்ந்து கொண்டேன். இதை யின்று உன்னிடந்தான் முதல் முதலாகக் கூறுகிறேன். இதனுல் நீர் என் சத்தி யத்தை யறிந்துகொள்ள வேண்டுமென்று உம்மிடம் இதைக் கூறினேனேயன்றி அப்படிக்கின்றேல் கூறியே யிரேன்" என்ருர்.

சீமாட்டி:—தாங்கள் கூறியது உண்மையே. சற்று முன்பு தங்கள்மேல் கொஞ்சம் சந்தேகம் கொண்டதற்காக மன்னிக்கவேண்டும். தாங்கள் சத்தியம் தவிரமாட் டீர்களென்று நம்புகிறேன். இனி நடந்த சங்கதியை விபரமாய்க் கூறுங்கள்" என்ருள்.

டாக்டர்:—குழந்தை யென்னிடம் வந்த சிலமாதங்கள் கழித்து நான் முன் இருந்த விடத்தைவிட்டு இங்கு வந்துவிட்டேன். அக்குழந்தைக்காக ஒரு செவலித் தாயை யமர்த்தி யிருந்தேன். ஒருநாள் அவள் நல்ல காற்றுக்காகக் குழந்தையை நகா உத்தியானவனத் திற்கு எடுத்துச் சென்ருள். அங்கு யாரோ ஒரு கோர ரூபியான ஒரு மனிதனும் ஒரு பையனும் இருவரும் வந்து அக்குழந்தையைக் களவாடிக்கொண்டு போய் விட்டார்கள்.

அம்மனிதன் பயங்கரமான சபதங்களைக் கூறிவிட்டுச் சென்ருனும் அவன் அக்குழந்தை யென் சொந்த குழந்தை யென்று எண்ணிக்கொண்டான். அதற்குப் பொய், சூது வாது. களவு முதலிய சகல அயோக்கிய நடக்கைகளையும் நன்ருய்க் கற்றுக்கொடுத்து சோம்பேரிகளிலும் மிக்க இழி

வான நிலைமையில் அதைப் பழக்கிவைத்து கடைசியில் வயது வந்தபின்பு அதற்கு உன் தந்தை யின்னவனென்று கூறி யென்னிடமே கொண்டுவந்து விட்டுவிடுவதாய்ச் சபதம் செய்துகொண்டு போனன். ஆனல் இதுவரையில் அப்படிக் கொண்டுவந்துவிடவில்லை. இப்போது அப்பிள்ளையுயிரோ டிருந்தால் 19 வயதிற்கு மேற்பட்ட வாலிபனுயிருக்கவேண்டும். நான் உடனே அக்குழந்தையைக் கண்டுபிடித்துக்கொண்டுவந்து கொடுப்பவர்களுக்கு ஆயிரம்ரூபாய் பரிசளிப்பதாய்ப் பிரசுரம் செய்திருந்தேன். ஆனல் என் பெயரை வெளியிடவில்லை. ஏனெனில் இராஜகுமாரி அந்த விளம்பரத்தைக் கண்டால் வியாகூலப்படுவாளென்று அப்படிச் செய்தேன். இதோ பார்'' என்று கூறிக்கொண்டே எழுந்துபோய் தன் பெட்டியைத் திறந்து அப்போது பிரசுரித்த துண்டுவிளம்பரம் ஒன்றை யெடுத்துவந்து சீமாட்டிக்குக் காட்டினர்.

சீமாட்டி மிக்க துயரடைந்து "அந்தோ! நான் என்ன செய்வேன்? என்ன சமாசாரத்தைக்கொண்டு போவேன். இப்போது தான் ஆவலோடு தான் ஆவலோடு தன் புத்திரனைக் கண்டுபிடித்து அவனுக்குத் தான் செய்யவேண்டிய சௌகரியங்களாகிய கடமைகளைச் செய்யவேண்டுமென்று முயலும் தாய்க்கு இச்சங்கதிகளை நான் எப்படிக் கூறுவேன்'' என்று பிரலாபித்தாள்.

டாக்டர்:—"அந்தோ சீமாட்டியே! தங்களுக்கு என்ன யோசனை கூறுவதென்று எனக்குத் தோன்றவில்லை. ஆயினும் ஒன்று கூறுகிறேன். அதாவது நான் மறுபடி யந்தப் பிள்ளையைத் தேட ஆலோசனை செய்துகொண்டிருந்தேன். அதற்காகத் தகுந்த ஆள் யாரு மகப்படவில்லை. தற்சமயம் ஒரு ஆள் நமது நகரில் இருக்கிறன். அவன் அதில் கட்டாயம் ஜெயமடையக்கூடிய

வன். அதோடு அவன் மிக்க சத்தியவான். துப்பறியும் தொழிலில் பிரக்யாதி பெற்றவன். நல்ல நடக்கையுடையவன். மிக்க சாமார்த்தியவான். அவனைப் பூரணமாய் நம்பலாகும். அவன் பெயர் செல்வநாதன். அவனிடம் நம்பி இந்த விஷயத்தை விட்டுவிட்டால் அவன் எப்படியேனும் உண்மையைக் கண்டுபிடித்து விடுவான். அவன் ஒரு துப்பறியும் உத்தியோகஸ்தன்' என்றதே,

சீமாட்டி "ஆயினும் அவனுக்கு இந்த இரகசியத்தைக் கூறவேண்டிய அவசிய மில்லையென்று கருதுகிறேன்" என்றாள்.

டாக்டர்:—"அவசியமே யில்லை. அவனும் அப்படி வர்ப்புறுத்தி இரகசியங்களைக் கேட்பவனல்ல. நான் அப்பையன் என் புத்திரனென்றும் அவனைக் கண்டுபிடித்தால் ஆயிரம் ரூபா யளிப்பதாகவும் கூறுகிறேன்" என்றார்.

சீமாட்டி யவ்வாறே யொப்புக்கொண்டு "விஷயங்கள் இப்படி யிருப்பதால் நான் இராஜகுமாரிக்கு உண்மையைக் கூறித் தேறுதல் உரைக்கிறேன்" என்றாள். டாக்டர் தான் உடனே புறப்பட்டுபோய்ச் செல்வநாதனைக் கண்டு ஏற்பாடு செய்வதாய்க் கூறினார்.

அதன்மேல் சீமாட்டி அவரிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றாள்.

* * * *
* * *

நேயர்களே! இப்போது நாம் இரத்ன புரியின் இன்னொருபாகத்தில் நடக்கும் விஷயங்களைக் கவனிக்க வேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமா யிருக்கிறது.

இரத்னபுரியின் வடபாகத்தில் கெம்பீரமான ஒரு பெரிய வீட்டில் வேலப்பன் என்ற ஒருவன் வசித்துக் கொண்டிருந்தான். அவன் மிக்க செல்வவந்தன். நகரத்தி லுள்ள செல்வவந்தர்களிலும் செல்வவந்தர் குமாரர்களிலும் துர் நடக்கைகளில் பிரவேசித்து கடன்வாங்கித் துர்விஷயங் களில் செலவழிப்பவர்களுக்கு அபரிமிதமான வட்டிக்குக் கடன் கொடுத்துப் பணம் சம்பாதிப்பவன். மேலுக்கு மிக்க சத்தியவான்போலும் தெய்வ பக்தி யுடையவன் போலும் மிக்க சீவகாருண்யமும், பரோபகார சிந்தையும் உடையவன் போலவும் நடிப்பவன். ஆனால் உள்ளத்திலோ பணம் சம்பா திப்பதில் எந்த அக்கிரமத்தைச் செய்யவும் அஞ்சமாட்டான். கல்லினும் கடின சித்த முடையவன். வெளிக்குச் செய்யும் சிற்சில தர்மங்களையும் சுபகலங் கருதியே செய்பவன். காலக்கேடு, அப்படிப்பட்டவன் நல்ல போகங்களை யனு பவித்துக்கொண்டு குதிரை வண்டியில் சவாரி செய்து கொண்டு திரியும்படிக்கும், சத்தியம், கருணை, சாந்தம், ஜீவ காருண்யம், பரோபகாரம் முதலிய குணங்களை யுடையவன் சோற்றுக்கே வழியின்றிப் பலவிதத் துன்பங்களை யனுப வித்துக்கொண் டிருக்கும்படி யாகவும் இருக்கிறது.

வேலப்பனிடம் விஸ்வநாதன் என்ற ஒரு வாலிபன் குமாஸ்தவா யிருந்தான். அவன் தாய் தந்தை யில்லாதவன். நல்ல குலத்திற் பிறந்தவன். யோக்கியதை யுடையவன். அவனுக்கு அமிர்தம்மாள் என்ற ஒரு தங்கையுண்டு. அவள் மிக்க அழகுடையவள். அவள் குணங்களும் நடக்கைகளும் நேர்த்தியானவைகளே. ஸ்திரீகளுக்கு வேண்டிய பொறு மை, ஜீவகாருண்யம், அச்சம், மடம், நாணம், பயிற்பு முதலிய எல்லா குணங்களும், அவளிடம் பூரணமாய் அமைந்திருந்தன.

வேலப்பன் தன் ஆபீஸ் அறையில் உட்கார்ந்து கொண்டு விஸ்வநாதனை யழைத்து உன் கணக்குகளைக் கொண்டுவா வென்றான். அதைக் கேட்டதே அவ்வாலிபன் முகவாட்டமடைந்து தன் மேஜைக்குச்சென்று கணக்கு புத்தகங்களை யெடுத்துவந்தான். வேலப்பன் அப்புத்தகங் களை யெடுத்துக்கொண்டு வாலிபனை நோக்கி,

"விஸ்வநாதம்! கணக்கில் தப்புகளிருக்கின்றன. ஆபீ ஸில் நேரிடும் சில்லரைச் செலவுகளெல்லாம் உன்னால் நடக் கிறது. இம்மாதக் கணக்கில் ரொக்கத்தில் குறைவு நேர்ந் திருக்கிறது" என்றான். இப்போது நாம் கூறும் சம்பவம் நடக்கும்போது மாலை நான்குமணி யிருக்கும்.

தன் எஜமான் கூறியதைக்கேட்ட விஸ்வநாதன் மிக்க திகிலடைந்து "அய்யா, நான் தங்கள் பணத்தைக் களவாடி மோசம்செய்ய எண்ணங்கொண்டவனல்ல. மேலும் நான் எவ்வித துர்நடக்கையு முடையவனல்ல. அதனால் எனக்கு வீண் செலவுசெய்ய அவசியமேயில்லை. வீட்டிலும் நானும் என் சகோதரியும் மிக்க சிக்கனமாகவே நடந்துகொள்ளுகிற வர்கள். தங்கள் கட்டளைப்படி சற்று நல்ல சுத்தமான உடைமட்டும் உடுத்திக்கொள்கிறேனே யன்றி வேறில்லை. ஆகையால் எனக்காகப் பணம்வேண்டி நான் எடுக்கவில்லை. முன்பு என் தங்கை மிக்க வியாதியுற்றிருந்தது தங்களுக்குத் தெரிந்த விஷயமே. அப்போது ஔஷதத்திற்கும் பத்திய ஆகாரம் முதலியவற்றிற்கும் பணம் போதாமலிருந்தது. அதுமட்டுமல்ல. நான் உத்தியோகத்திலிருந்து விடுமுறை பெறத் தாங்கள் அனுமதியளிக்கமாட்டே னென்றீர்கள். அதனால் என் தங்கைக்குச் சமீபத்திலிருந்து வேளைக்கு ஔஷதம் ஆகாரம் கொடுக்கவும், வேண்டிய மற்ற உதவி களைச் செய்யவும் ஒரு செவிலித்தாயைச் சம்பளத்திற்கு

அமர்த்திக்கொள்ள நேர்ந்தது. இச்செலவுகளுக்குப் பணம் போதாமலே நான் கொஞ்சம் எடுத்து உபயோகிக்கக் கட்டாயப் படுத்தப்பட்டேன். தங்களுடைய சிவகாருண்யத்தை நம்பிச் சீக்கிரத்தில் அப்பணத்தைப் போட்டு சரிப்படுத்திவிடலாம் என்றே அப்படிச்செய்தேன். ஆகையால் தாங்கள் இதை மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன். எனக்காக அல்லாவிட்டாலும் பரிதாபமான என் தங்கை விஷயத்திலாவது இரக்கம் வைத்து இக்குற்றத்தை மன்னிக்கப்பிரார்த்திக்கிறேன்'' என்று வேண்டிக்கொண்டான்.

வேலப்பனுடைய குணத்தைப்பற்றி நாம் முன்னமே கூறியிருக்கிறோம். அவன் விஸ்வநாதனுடைய தங்கையை இரண்டொருமுறை பார்த்திருக்கிறான். ஆனால் அவளுடைய அடக்கம், கற்பு, யோக்யதை முதலிய நற்குணங்களைக் கொஞ்சமேனும் கவனித்தவனல்ல. சூரியன் நன்றாய்ப் பிரகாசித்துக்கொண் டிருந்தாலும் குருடன் அதைக்காண முடியாததைப்போல், அயோக்கியருக்கு மற்ற பேருடைய மேன்மையான குணங்கள் புலப்படுவது மிக்க கடினமே. அவ்வாறே யத்துஷ்டன் அக்கன்னிகையின் குணங்களை யுணர்ந்து புகழ்வதை விட்டு, அவளுடைய நேர்த்தியான வனப்பைமட்டும் கவனித்துத் தன் மனதில் துர் எண்ணங்கொண் டிருக்கும் இச்சமையமே நமது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவேண்டிய காலம் என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டான்.

இத்தகைய கெட்ட எண்ணங்கொண்டு விஸ்வநாதனை நோக்கிப் பின் கண்டவாறு மொழிந்தான்:—

"வாலிபனே! திருடும் குற்றம், அதிலும் எஜமானை மோசம் செய்வது பெரியகுற்றம். தொகை கொஞ்சம், அதிகம் என்பதில் வித்தியாசம் சற்றுமில்லை. நான் நீதியோடு

நடப்பவனென்பது யாவரும் அறிந்து நம்பியிருக்கும் விஷயம். நாட்டில் அரசனென்றும், நீதியென்றும் சட்டமென்றும், நியாயாதிபதியென்றும், தண்டனையென்றும் இருக்கிறது. அதற்கு விரோதமாய் நடப்பவர்கள் அரசனுக்கும் நீதிக்கும் துரோகம் செய்தவராவார்கள். இவ் விஷயத்தில் சுற்றத்தார் என்றும், சிநேகரென்றும் தாக்ஷணியம் பார்க்கலாகாது. ஆகையால் இதை நான் அடக்கிவிடமுடியாது. சட்டப்படி உன்னை யுடனே போலீஸாரிடம் ஒப்பித்து விடவேண்டியதே யென்வேலை'' என்று சாவதானமாய்க் கூறினான்.

நேயர்களே! இம்மொழிகளைக் கேட்ட வாலிபன் மனம் என்ன நிலைமையிலிருக்கும் என்பதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டியதில்லை. அவன் இதுகாறும் தன் எஜமான் குணங்கள் வெளித்தோற்றமா யிருப்பதையே பூரணமாய் நம்பிக்கொண்டிருந்தான். இப்போது அவன் வார்த்தைகளைக் கேட்கவே பிரமிப்படைந்து விட்டான். என்ன செய்வான் பாபம்.

எஜமான் பாதங்களில் விழுந்து "அந்தோ! நான் மோசம் செய்யக்கருதி யிப்படிச் செய்யவில்லை. என் நன்னடைக்கையே யெனக்குச் சீவனாதாரம். தாங்கள் என்மேல் கருணை காட்டாவிட்டால் நான் சிறைவாசத்தை யடையவேண்டும். அதற்குக் கூட நான் அவ்வளவு விசனப்படமாட்டேன். அந்தோ! என் தங்கை முன்பு அனுபவித்த வியாதியால் இன்னும் மிக்க பலகீனமான ஸ்திதியிலிருக்கிறாள். இச் சங்கதியைக்கேட்டதே யவள் பிராணன் போய்விடும். அப்படிக் கில்லாவிடினும், நான் சிறைவாசத்திற்குச் சென்றால் அவள் ஆதரணையின்றி மடிந்துபோவது நிச்சயம். நான் கூடிய சீக்கிரத்தில் தங்கள் பணத்தைச் சேர்த்துவிடு

186592

கிறேன். என்னைக் கருணைபுரிந்து காப்பாற்றவேண்டும்'' என்று கண்ணீர் விட்டுக்கொண்டே மறுபடி யவன் பாதங்களில் விழுந்துவிட்டான்.

நேயர்களே அச்சமயம் அவன் உயிர் தாமரையிலை நீர் போல் தத்தளித்துக்கொண்டிருந்தது. வேலப்பன் சற்றும் சம்மதியாமல் தான் நீதிக்குச் சற்றும் துரோகம் செய்யாதவன்போலவே பேசி போலீசாரிடம் உன்னை யொப்பித்து விட்டால் நீ யித்தகைய கஷ்டங்களை யெல்லாம் அனுபவிக்க வேண்டுமென்று அவ்வாலிபனை மிக்க பயமுறுத்திப் பன்முறை அவன் கோவென்றழுதும் சற்றும் இரக்கமின்றிக் கடைசியில், “அப்படியாயின் உனக்காக ஒரு நிபந்தனையின் மேல் உனக்கு மன்னிப்பளிப்பேன்'' என்றான்.

இதைக்கேட்ட வாலிபன் வாடி யுலரப்போகும் பயிர் மழைத் தூறலைக் கண்டதுபோல் சற்று தேறுதலடைந்து “என்ன நிபந்தனை? உங்களுக்கு அடிமைபோல் என்ன செய்யச்சொன்னாலும் செய்கிறேன்'' என்றான்.

அப்பரமதுஷ்டன்:—“நான் கூறுவது ஓரே நிபந்தனை. அதை யொப்புக்கொள்ளாவிடின் உடனே போலீஸார் வசம் ஒப்பித்து விடுவதே. அதாவது, உன் தங்கையை எனக்கு வைப்பாட்டியா யிருக்கச்செய்து விட்டால் உன்னை மன்னிப்பேன்'' என்றான்.

இதைக்கேட்டதே வாலிபன் தலைமேல் பேரிடி விழுந்ததுபோல் பிரமித்து ஆவிசோர்ந்து மனம் புழுங்கி பரிதவித்தான். மறுபடி சந்தேகமும் கலவரமுமடைந்து, “அய்யா ஜீவகாருணியமும் சத்தியநெறியுமுடைய தாங்கள் மனப்பூர்வமாய் இப்படிக் கூறுகிறீர்களென்று நினைக்கவில்லை. என்னை யிப்படிச் சோதிக்கவேண்டாம். தயவுசெய்து இச்

சமயம் மன்னிக்கவேண்டும்'' என்று எவ்வளவோ பிரார்த்தித்தான்.

அச்சண்டாளனே "நீ வீணுய் சத்தியம் பத்தியம் என்று வீணுப் பிதற்றுவதில் பயனில்லை. நான் கண்டிப்பாய்க் கூறுகிறேன். சோதனையல்ல ஒன்றுமல்ல. இன்று முதல் மூன்றுநாள் தவணை தருகிறேன். அதற்குள் நீ யுன் தங்கையை யென்னிடம் ஒப்பித்துவிட ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு ஒப்புக்கொண்டால் சரி. இன்றேல் உடனே போலீஸ்காரனை யழைக்க ஆள் அனுப்புவதே. இதை வெளியில் கூறிவிட்டு என்னை யவமானம் செய்து விடப் பயமுறுத்தினுல் தப்பித்துக் கொள்ளலாமென்று நினைக்காதே. எனக்கு வெளியிலிருக்கும் நற்பெயருக்கும், கௌரவத்திற்கும் நான் இப்படிக் கூறினேனென்று ஒருவரும் நம்பமாட்டார்கள். அதற்கு மாருய் நீ யென்னை யவதூறு செய்ததாய் உன்னைத் தண்டனை யடையச் செய்வேன்'' என்ருன்.

வாலிபன் என்னசெய்வான் பாபம். அவன் இப்போது தான் தன் எஜமான் குணத்தை யறிந்துகொண்டான். அவன் மனம் புண்பட்டது கடவுளுக்கே தெரியும். சிந்தித்துப் பார்த்தான். எப்படியும் மூன்றுநாளாவது இடையிலிருக்கிறது. அதற்குள் தீர்க்காலோசனை செய்யலாம் என்று சிந்தித்துக்கொண்டு "அப்படியே யொப்புக்கொள்ளுகிறேன்'' என்று எஜமான் நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டான்.

வேலப்பன்:—"பத்திரம் நீ எங்காவது தலைமறைந்துகொள்ளலாமென்று நினையாதே. நீ யெத்தகைய மாறுவேடமணிந்திருந்தாலும் உன்னைக் கண்டுபிடித்துவிடுவேன்'' என்று கூறிவிட்டுத் தன் அறைக்குச் சென்ருன்.

---

# 48 - வது அத்தியாயம்.

வேலப்பன் தன் அறைக்குச் சென்ற சற்று நேரத்திற்குள் குமாரவேல் பிரபு அவனிடம் வந்தான். இருவரும் சற்றுநேரம் நகரசங்க விஷயத்தைப்பற்றி சம்பாஷித்துக்கொண டிருந்தார்கள், பிரபு வேலப்பனை மிக்க முகஸ்துதியோடு புகழ்ந்து பேசியபின்,

"நண்பனே கொஞ்சம் சில்லரைத்தொகை அவசரமாய் வேண்டும். உன்னிடம் வந்தால்தான் சமயமறிந்து சட்டென்று அளிப்பாயென் றுணர்வேனுதலால் நேராய் இங்கு வந்தேன்" என்றான்.

**வேலப்:**—"எவ்வளவு தொகை? எவ்வளவு காலத்திற்கு? எந்தப்பொறுப்பின்மேல்?" என்றான்.

பிரபு:—அதிகமில்லை இரண்டாயிரம் பவுன்களே. ஆறுமாதத் தவணைக்கு. என் சொந்த உண்டியின்மேல்.

**வேலப்:**—தங்கள் உண்டிகள் அனேகம் முன்னமே நகரில் உலவிக்கொண் டிருக்கின்றனபோல் தெரிகிறதே.

பிரபு:—சேசே! பேசக்கூடாது. ஏதோ இரண்டொரு உண்டிகளே வெளியிலிருக்கின்றன.

**வேலப்:**—தங்களுக்காகவே யில்லாவிட்டாலும் நண்பர்களுக்காக சாட்டிக் கொண்டவைகளும் கூட்டுக் கையொப்பம் வைத்தவைகளு மில்லையா?

பிரபு:—பேஷ். நான் என்னதான் புத்திபிசகிக் கொஞ்சம் அதிக செலவு செய்தாலும் அப்படிப்பட்ட முட்டாள் தனம் செய்வேனென்று நினையாதே. எனக்கே யின்

ளொருவர் உதவிவேண்டும். நான் எங்கே வொருவர்க்கு உதவி செய்வது?

வேலப்பன் சந்தேகமான பார்வையாய் அவரைப்பார்த்துக்கொண்டே "அப்படியானால் தாங்கள் யாருக்கும் கூட்டாய்க் கையொப்பம் வைக்கவில்லை?" என்றான்.

பிரபு:—ஒருகாலுமில்லை; ஒருவர்க்கும் அப்படி வைக்கவேயில்லை. ஆனால் சிலர் கேட்டார்கள். வாசுதேவம் பிரபு, பொன்னுசாமி பிள்ளை, நேற்று கைது செய்யப்பட்டானே. அவன், கர்னல் மாரப்பன் முதலியவர்கள். முன் கூறப்பட்ட இரண்டு ஆசாமிகளிடமும் காசு கிடையா மாரப்பனிடம் எனக்கு நம்பகமே யில்லை.

வேலப்பன் பிரபுவின் முகத்தை உற்றுப்பார்த்துக் கொண்டே "கர்னல் மாரப்பன்கூட கேட்டானே?" என்றான். பிரபு "ஆம் நான் ஒருவருக்கும் ஒத்துக்கொள்ளவில்லை" என்றார்.

வேலப்:—"சரி தாங்கள் இரண்டாயிரம் பவுன்களுக்கு அண்டிமாண்ட் எழுதுங்கள்" என்றான். டிஸ்கவுன்ட் விஷயத்தில் சற்று தகரார் நேர்ந்து கடைசியில் ஆறு மாதத்திற்கு 200-பவுன்போக 1800-பவுன் கையில் கொடுத்துவிட்டு 2000 - பவுனுக்கு பான்ட் எழுதி முடிந்தது.

பிரபு பணத்தை வாங்கிக்கொண்டு சென்ற சற்றுநேரத்திற்குள் கர்னல் மாரப்பன் வேலப்பனிடம் வந்தான்.

மாரப்:—என்ன விசேஷம்?

வேலப்:—ஒருவிசேஷமுமில்லை. குமாரவேல்பிரபு வந்திருந்து இப்போதுதான் சென்றார்.

மாரப்:—என்னத்திற்கு வந்தார்?

வேலப்:—என்னிடத்தில் பணம்கேட்க வருகிறவர்களே யொழிய வேறு யார் வருவார்கள்? ஆனல் பலபேர் பல வித வழியாய் வந்து பணம் வாங்குகிருர்கள். சில பத்திரங்கள் வெறுங்கடிதங்களாய் விடுகின்றன. சில கள்ளப்பத்திரங்களே. பலவிதமா யிருக்கின்றன.

மாரப்பன்;—இருக்கும். சில சமயங்களில் அப்படிப்பட்ட நஷ்டத்தையு மனுபவிக்க நேரும். அத்தகைய சந்தர்ப்பத்தில், முக்கியமாய் கள்ளக் கையொப்பம் வைக்கப் பட்டவைகளாயின், நீ யென்னசெய்வாய்?

வேல:—அவன் காசில்லாத பஞதிப்பயலாயின், மற்றவர்களுக்குப் புத்திவரும் வண்ணம் அவனைச் சிறைச் சாலைக் கனுப்பிவிடுவேன். எவ்விதமாவது காசு கிடைக்கக்கூடியவனுயின் அவனுக்கு 24 மணிநேரம் நோடீஸ் கொடுத்துவிடுவேன். உன் விஷயத்தில் அப்படித்தான் செய்யப்போகிறேன்.

இதைக்கேட்ட மாரப்பன் சற்றும் மனக்கலக்க மடையாதவன்போல் "என்னையா கூறுகிருய்? நீ கூறுவது என்ன? இதெல்லாம் விளையாட்டுப் பேச்சல்ல" வென்ருன். அவன் முதலில் ஏதோ கோபத்தோடு கேட்பவன்போல் நடித்தாலும் அடுத்தநிமிடம் உள்ளத்தி லுண்டான திகிலால் அவன் முகம் சவம்போல் வெளுத்துவிட்டது.

வேல:—"என்னிடம் ஒன்றும் கூறவேண்டாம். இதோ நீரே பாரும். நீர் கொடுத்த ஐயாயிரம் பவுன் பெறும் படியான பாண்டுகள். அவற்றிலுள்ள குமாரவேல் பிரபுவின் கையொப்பத்தையும், இதோ அவர் இப்போ தெழுதிக்கொடுத்தப் பத்திரத்திலுள்ள கையொப்பத்தையும்" என்று பத்திரங்களை யெடுத்துக் காட்டினுள்.

அதைக் கண்டதே மாரப்பன் முகம் திகிலும் வியப்பும் கலவாமு மடைந்தது. அவன் "அய்யோ கடவுளே! எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நான் என் பாண்டுகள் சத்தியமானவையென்றே நம்பி யிருக்கிறேன். இப்போது நீ காட்டுவதைப் பார்த்தால் கள்ளக் கையொப்பம்போலவே காண்கிறது" என்றான்.

வேலப்பன் "அப்படி நீ இன்னொருவரால் மோசம் செய்யப்பட்டதாயின் நாம் சேராய் நகரநியாயாதிபதி யிடம் செல்லவேண்டியதே" என்றான்.

மாரப்:—"அய்யோ! அப்படிச் செய்யலாகாது. நீ சற்று தயவுசெய்யவேண்டும். நான் இதனுண்மையை யறிய இன்னொரு ஆசாமியைக் கண்டு பேசவேண்டும்" என்றான்.

வேல:—ஏன்? நீ சட்டென்று ஊரைவிட்டுப்போய்விடவோ? அப்படி முடியாது. எனக்குப் பெரும் பணம் போக்கா யிருக்கிறது. இந்த விஷயம் பைசல் ஆகும் முன்பு நாம் பிரியமுடியாது. நீ மிக்க சாமார்த்தியமாய் என்னை யிதுவரையில் ஏமாற்றிவிட்டாய். இனி நான் ஒரு போதும் ஏமாறமாட்டேன். எனக்கு உடனே தக்க பொறுப்பு கொடுக்கவேண்டும். இன்றேல் நான் உடனே போலீஸ்காரனைக் கூப்பிடவேண் டியதே.

மாரப்பன் இதைக்கேட்டதே பேரிடி விழுந்தவன் போல் ஆவிசோர்ந்து "ஓ! நண்பனே! உன்னை வேண்டிக் கொள்கிறேன். அவசரப்பட்டு அப்படி யொன்றும் செய்து விடாதே. அதனால் எவ்வளவு கெடுதி யுண்டாகுமென்பதை யிப்போது நீ யறியாய். நீ முன்பு கூறியதுபோல எனக்கு 24 மணிநேர அவகாசம் கொடு" என்றான்.

வேலப்:—இல்லை யில்லை. இது அப்படிப்பட்ட விஷயமல்ல. நீ யுடனே நாட்டைவிட்டுப் போய்விடுவாய்; அதனால் எனக்கு நம்பகமில்லை. நான் உடனே உன்னைப் போலீஸாரிடம் ஒப்பிக்கவேண்டியதே. ஒருசமயம் உன் நண்பர்களில் யாரேனும் உதவிசெய்ய வரக் கூடும்.

மாரப்:—அவசரப்படாதே. இதே பத்திரங்களைப்பற்றி நான் உன்னிடம் ஒரு பெரிய இரகசியம் கூறுகிறேன். நீ யதை வெளியிடலாகாது. மனதில் வைத்துக்கொண் டிருப்பதாக வாக்களிக்கிறாயா?

வேலப்:—கட்டாயம் அப்படியே செய்கிறேன். எனக்கு வேண்டியது சரியான சமாதானமே.

மாரப்:—ஆகா! பூரண திருப்தி யளிக்கிறேன். நீ மட்டும் சற்று பொறுமையாயிருந்தால் தக்க ஆசாமியின் வாக் காலேயே நான் சுத்த நிரபராதியென்று நிரூபிக்கிறேன்.

வேலப்:—நீ யப்பணத்தைக் கொடாவிட்டால் அந்த ஆசாமி யால் பணம் கிடைத்துவிடுமா?

மாரப்:—ஆகா தடையின்றி கிடைக்கும். அந்த இரகசியத் தைமட்டும் நீ மிக்க பத்திரமாய்ப் பாதுகாக்கவேண் டும். நான் முன்னடியே கூறுகிறேன். அது மிக்க ஆச் சரியமான இரகசியம்.

வேலப்:—அதாவது நீ குறித்த காலத்திற்குள் இப்பத்திரங் களுக்குச் சேரவேண்டிய பணத்தை யளிக்காவிட் டால் நான் அந்த ஆசாமியிடமிருந்து பணத்தைப் பெறுவதற்காக இந்த இரகசியத்தை வெளியிட்டு விடு வதாய்ப் பயமுறுத்தவேண்டும். இதுதானே கருத்து?

மாரப்:—ஆனால் நானே பணத்தைக் கொடுத்துவிட்டால் நீ இந்த இரகசியத்தைத் தேவ இரகசியமாய் மதித்துக் காப்பாற்றவேண்டும்.

வேலப்:—சரி அப்படியே ஒப்புக்கொள்ளுகிறேன். இன்னொருவர் வாயால் இந்த இரகசியத்தை என்முன் நீ எப்போது வெளிப்படுத்துவது? அதற்கெப்படி ஏற்பாடு?

மாரப்:—நாளை இரவு எட்டுமணிக்கு நான்வந்து உன்னை யொருவிடத்திற் கழைத்துக்கொண்டு போகிறேன். அங்கு நீ யொரு மறைவிடத்திலிருந்துகொண்டு நானும் இன்னொரு ஆசாமியும் பேசும் சம்பாஷணையைக் கேட்டு யாவும் தெரிந்துகொள்ளலாகும். அப்போது உனக்கு யாவும் புலப்படும்.

இவ்வாறு ஏற்பாடு செய்துகொண்டபின் மாரப்பன் விடைபெற்றுக்கொண்டு சென்றான்.

* * * *

* * *

## 49 - வது அத்தியாயம்.

மேற்கண்ட சங்கதிகள் நடந்த மறுநாட்காலை ஒன்பது மணிக்கு இரத்தினபுரியின் தென்பாகத்திலுள்ள ஒரு அழகியகோயிலுக்குள் ஒரு வாலிபன் பிரவேசித்தான். அவனுக்கு வயது இருபத்திரண்டிற்கு அதிகமிராது. மிக்க அழகுடையவன். அவன் முகத்தில் பெருந்தன்மையும் கம்பீரமுமானதோற்றமும் அறிவின் பிரகாசமும் நிலையாயிருந்த போதிலும் அச்சமயம் கார்மேகம் சூரியப்பிரகாசத்தை மறைப்பதுபோல் அவன் முகத்தில் மிக்க வியாகூலமாகிய

இருள் சூழ்ந்திருந்தது. அதோடு அவன் சமீபகாலத்தில் தன் சுற்றத்தாரில் ஒருவரை யிழந்தவன்போல் துக்க வுடை யணிந்திருந்தான். அவன் பெயர் மதுரைநாயகம்.

அவன் நோய் கோயிலில் பிறப்பு மாணம் இவற்றைப் பதிவு செய்யும் இலிகிதரிடம் சென்றான். இலிகிதன் "ஆ! மதுரநாயகம்—மதுரநாயகம் பிரபு வென்று நியாயமாய் அழைக்கவேண்டும்" என்றான்.

மதுரைநாயகம்:—"இப்போது பூஸ்திதியைப்பற்றி நான் கவனிக்கவேண்டியது அவசியமாய்விட்டது. அதைப் போலவே குடும்பப்பட்டத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நண்பர்கள் கூறுகிறார்கள். ஆனால் எனக்கு அப்படிச் செய்யப் பிரியமில்லை. ஒருவருடம் வரையில் என் தந்தைக்காகத் துக்க உடை யணிந்து கொண்டுதா னிருப்பேன். என்னால் கூடியவரையில் அவருடைய உண்மையைக் கண்டறிய முயல்வேன். கடவுள் எனக்கு உதவிபுரிவார் என்றே நம்புகிறேன். பிறகு தான் அவர் இறந்துபோனது உண்மையென்று கருதுவேன். அதற்கிடையில் பட்டத்தை யேற்றுக் கொள்ள என்மனம் ஒப்பவில்லை" என்றான்.

இலிகிதன்:—"தங்கள் தந்தை திடீலென்று மறைந்துவிட்டது மிக்க ஆச்சரியமான சம்பவம். அவருக்கு ஏதாவது தற்செயலாய் இடையூறு நேர்ந்திருக்கும் பக்ஷத்தில் இதுகாறும் ஏதாவது சங்கதி வெளிவந்திருக்கும். ஒருசமயம் யாராலாவது அக்கிரமமாய்க் கெடுதி நடந்திருந்தால்தான் சங்கதி வெளிவருவது கஷ்டம்" என்றான்.

மதுரைநாயகம்:—"போதும் போதும் அச்சங்கதியைப்பற்றி யின்னும் கூறவேண்டாம். அது மிக்க கோரமான

மனவருத்தமா யிருக்கிறது. என் பிறந்த ஸார்டிபிகேட் அகப்பட்டதா?" என்றான்.

இலிகிதன்:—தங்களுக்கு விவகாரதசை வந்துவிட்டதென்பதற்கு அத்தாக்ஷி வேண்டுமென்று கூறியதே நான் நன்றாய்த் தேடிப் பார்த்து அதைக் கண்டு பிடித்துவிட்டேன். இப்போது தங்களுக்கு வயது இருபத்திரண்டு முடிந்து மேலே நடக்கிறது.

மதுரைநாயகம் "சரிதான். என் கார்டியன்கள் என் சுற்றத்தாரே யானதால் அவர்களுக்கு யாவும் தெரியுமாயினும், சட்டச்சடங்கின்படி இந்த அத்தாட்சி வேண்டும்" என்றான்.

இலிகிதன்:—ஆம் ஆம். அத்தாட்சி பத்திரம் அகப்பட்டுவிட்டது. இன்னொரு அதிசயசங்கதி. இங்கு இன்று திடீலென்று ஒரு அதிசயக் கலியாணம் நடக்கப்போகிறது. நீரும் சமயத்திற்கு வந்தீர்.

மதுரைநாயகம்:—யாருக்கு?

இலிகிதன்:—மதனவல்லியென்ற ஒரு அபூர்வமான அழகிய மாதுக்கும் செல்லப்பன் என்பவருக்கும். அம்மாதைப் பற்றி யாவரும் வியப்பாய்க் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால் நான் அவளைக் கண்டதில்லை. தாங்கள் பார்த்திருக்கிறீர்களோ?

மதுரை:—நானும் கண்டதேயில்லை. இதில் அதிசயமென்ன?

இலிகிதன்:—இது மிக்க அவசரக் கலியாணம். நெடுநாளாய் இத்தகைய கலியாணங்களைப்பற்றி எனக்கொரு கலவரமுண்டு. பலசமயங்களில் அழகிய வாலிப கன்னியர்கள், விகாரமான கிழவர்களுக்கு மணம் செய்யப் பட்டிருக்கிறார்கள். ஆனால் அத்தகைய மணங்கள்

பின்னால் திருப்திகரமா யிருப்பதில்லை. அப்பெண்கள் பிறகு யாரையாவது பிடித்துக்கொண்டு ஓடிவிடு கிறார்கள். சில துஷ்டர்கள் செல்வத்திற்காக பணக் காரப் பெண்களை மணம்புரிந்துகொண்டு அப்பணத்தை யழித்துவிட்டு மனைவியைக் கைகழுவி விடுகிறார்கள். நான் கூறுகிறேனென்று வருத்தப்பட வேண்டாம். மேல் அந்தஸ்தி லிருப்பவர்களில் பெரும்பாலாருக்கு இவ்விஷயத்தில் ஈவிரக்கம் கிடையாது. சிலருக்கு அக்குணங்க ளிருப்பினும் அவற்றைச் சரியான வழி யில் அவர்கள் உபயோகிப்பதில்லை.

மதுரை:—"ஆம் ஆம் உண்மையே" என்றான்.

அச்சமயம் குரு வந்துவிட்டார். அதன்மேல் மதுரை நாயகம் ஒரு ஆசனத்தில் உட்கார்ந்தான். இரண்டொரு நிமி டங்களில் குமாரவேல் பிரபுவும் அங்கு வந்தார். அவர் முகத்தில் அதிருப்தியும் வெறுப்பு மிருந்தது. அவர் மதுரை நாயகம் பிரபுவை யறிவார் ஆதலால் அவர் பக்கலில் உட் கார்ந்தார். மறுநிமிடம் ஸர்தார் சூரியநாயகம் அங்கு வந் தார். இவர்கள் தற்செயலாய் வந்தவர்களாய்த் தோன்ற வில்லை. ஸர்தார் பிரபுவும் மதுரைநாயகமும் இருப்பதைக் கண்டு அவர்களருகிற் சென்று வாலிபனைநோக்கி, "மதன வல்லியின் கலியாணத்திற்காக வந்தாயோ?" என்றார்.

மதுரை:—நான் எப்படி வருவேன். நான் முன்பின் அம் மாதைக் கண்டதேயில்லை. நான் ஒரு அலுவலாய் இங்குவந்தேன். கலியாணம் நடக்கிறதென்று பார்க் கலாமென்று உட்கார்ந்தேன்.

குமாரவேல்பிரபு ஸர்தார் சூரியநாயகத்தைநோக்கி "இர கசியமாய், "நீ எப்படி யிதை யறிந்துவந்தாய்?" என்றான்.

ஸர்தார் இரகசியமாய்க் கேள்விப்பட்டு வந்தேன். நீ யெப்படி வந்தாய்?''

பிரபு:—நானும் அப்படியே. நீ யிதைப்பற்றி சட்டைசெய்யவில்லைபோலும்.

ஸர்தார்:—என்ன பிரயோஜனம்? செல்லப்பன் அதிஷ்டசாலியே. இருவருக்கும் நான் நல்லவாழ்த்து கூறுவேன் அவ்வளவே. ஆனல் உனக்கு மனவருத்தமுண்டாயிருப்பதாய்த் தெரிகிறது.

பிரபு:—'இவ்விஷயம் இவ்வளவோடு முடிந்துவிடுமென்று நான் கருதவில்லை. ஆ! இதோ அவர்கள் வந்துவிட்டார்கள்'' என்ருர்.

அச்சமயம் மணமகனும் மணமகளும் இன்னும் சிலரோடுகூட உள்ளே வந்தார்கள். உடனே கலியாணச்சடங்கு தொடங்கியது. பத்மாவதியம்மாளும், மதனவல்லியின் தோழியும் இன்னும் இரண்டொருவரும் வந்திருந்தார்கள். மதுரைநாயகம் மதனவல்லியைக் கண்டதும் மிக்க வியப்படைந்து உற்றுப்பார்த்தான்; பிரமிப்படைந்தான். பிறகு ஸர்தாரை நோக்கி இம்மாதுதான் மதனவல்லியோ என்ருன். ஸர்தார் ஆம் என்றதே "அப்படியாஞல் நாம் நினைத்தது தவருயிருக்கும்" என்று தனக்குள் கூறிக்கொண்டான். ஆயினும் அவனுக்குள் கலவரம் கலவரமே.

செல்லப்பன் பிரபுவையும் ஸர்தாரையும் கண்டு வந்தனமளித்தான். ஸர்தார் சந்தோஷத்தோடு பிரதி வந்தனமளித்தார். பிரபுவோ வெறுப்போடு தலையசைத்தார்.

கலியாணச்சடங்கு முடிந்ததே ஸர்தார் தம்பதிகளுக்கு சந்தோஷமாய் வாழ்த்துகூறினர். பிரபு சற்றுநேரம் பேசாமலிருந்து பிறகு மெதுவாய் மதனவல்லியிடம் சென்று "நீ

மணம்புரிந்து கொண்டதற்காக நான் சந்தோஷம்கொண் டாடுகிறேன்'' என்று கூறிவிட்டு, செல்லப்பனை இரண்டு கெஜம் அப்புறம் அழைத்துச்சென்று அவனிடம் "உன் மணத்திற்கும் சந்தோஷம் கொண்டாடுகிறேன். ஒரே இர வில் இளவரசனுக்கும் சுகசிங்கம் பிரபுவிற்கும் தன் காதலை யளித்த மாதை நீ மணந்துகொண்டதற்காக'' என்று கூறி விட்டு எட்டச் சென்றான்.

அம்மொழிகளைக் கேட்டதே செல்லப்பன் மனம் திடுக் கிட்டு வருந்தியது. ஆயினும் அதை யவன் உள்ளேயே யடக் கிக்கொண்டான். மதனவல்லி மட்டும் பிரபுவின் வார்த்தை களை வெறுப்போடேயே யேற்றுக்கொண்டாள்.

சற்றுநேரத்திற்குள் மணக்கோலம் பூண்டவர்கள் கோவிலைவிட்டுப் புறப்பட்டார்கள். அவர்கள் வீடுபோய்ச் சேர்ந்ததும் விருந்து ஆயத்தமாயிருந்தது. அது முடிந்த தும் அவர்கள் தேசாசாரப்படி மணமகனும் மணமகளும் இரண்டொரு வேலைக்காரர்களும் ஒரு துறைமுக நகரத்திற் குச் சென்று கொஞ்சகாலம் ஏகாந்தமா யிருக்கப் புறப்பட் டார்கள்.

வண்டி நகரைக்கடந்து சென்றபோது மதனவல்லி தன் மணவாளனை நோக்கி "குமாரவேல்பிரபு வும்மிடம் என் னமோ கூறினார். என்னதான் கூறினார். அதை யொளிக்கா மல் கூறும்'' என்றாள்.

செல்லப்பன் உண்மையைக் கூறினான். மதனவல்லி "நான் அந்த இரண்டு ஆசாமிகளின் வீட்டிற்கும் சென்றதை யவன் கூறினான். நான் அந்த விடங்களுக்குச் சென்றதை யும் அங்குநடந்த சம்பவங்களையும் உமக்கு விவரமாய்க் கூறி யிருக்கிறேன்'' என்றாள்.

செல்லப்பன் "அப்படியிருந்தும் அவன் இச்சங்கதியைக் கூறியதே இவன் எப்படி யிதையறிந்துகொண்டான் என்று எனக்கு மிக்க வியப்பாய்விட்டது" என்ருன். மதனவல்லி "அவன் என்மேல் வேவு ஆட்களை வைத்திருக்கிருன். கலியாணம் நடக்கும்போது கோயிலில்கூட அவர்கள் வந்திருந்ததை நான் கண்டேன். இச்சங்கதியை நான் நேற்றுதான் அறிந்தேன்" என்ருள்.

அவள் கூறியபடி கலியாணம் நடக்கும் சமயம் கபுர் கிருஷ்ணனும் அவன் ஆள் எச்சனும் கோயிலின் ஒரு மூலையில் குந்தியிருந்தார்கள். வேவுகாரர் விஷயத்தைப்பற்றிப் பிறகு சாவகாசமாய்ப் பேசிக்கொள்ளலாமென்ற ஏற்பாட்டின்போல் சதி புருடர்கள் துறைமுகத்தை நோக்கிச் சென்றுகொண் டிருந்தார்கள். உண்மையாகவே அவர்களிருவரும் ஒருவரையொருவர் நேசித்திருந்தார்கள் என்று நாம் கூறுவது மிகையாகாது.

இதற்கிடையில் மதுரைநாயகம் கோயிலைவிட்டுத் தம் மாளிகைக்குச் சென்ருன். அன்று முழுதும் மதனவல்லியின் நினைப்பு அவன் மனதைவிட்டு நீங்கவில்லை. ஒவ்வொரு சமயம் தன் தந்தையாகிய அருமைநாதம் பிரபுவின் சங்கதியொன்றும் தெரியாதிருப்பதைப்பற்றி இந்த நினைப்பு மறந்துவிடச் செய்ததேயென்று தன்னைத்தானே வெறுத்துக் கொள்வான்.

---

## 50- வது அத்தியாயம்

முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட கலியாணம் நடந்த அதே தினம் பகல் பனிரண்டுமணிக்குப் பிரபுக்கள் வீதியிலுள்ள ஒரு நேர்த்தியான மாளிகையின் ஒரு அறையில் அழகிய ஒருமாது சோபாவின்மேல் உட்கார்ந்து

கொண்டிருக்கிருள். அந்த அறை மிக்க நேர்த்தியாய் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. அம்மாதுக்குச் சுமார் 26-வயதிருக்கும். அவள் நடுத்தரமான வயதுடையவள். மிக்க பிரகாசம்பொருந்திய கண்களையும் பூரண மதியமன்ன வதனத்தையும் சாந்துபோல் கருத்துப் பாசிபோல் சுருண்டு அழகிய புயங்களின்மேல் புரண்டுகொண்டிருக்கும் கூந்தலையுமுடையவள். கோவைக்கனியினும் சிவந்து பளபளப்பாயுள்ள அதரத்தின் மறைவிலிருந்து மின்னல்போல் ஜொலித்துக்கொண்டிருக்கும் பற்கள் முதல்தர கெட்டி முத்துக்களை ஒழுங்கு பிரழாமல் வரிசையாய்க் கோர்த்து வைத்திருந்தது போல் காணப்பட்டன.

நேயர்களே இத்தகைய கெம்பீரத் தோற்றமுடைய மாது யாரென்று நினைக்கிறீர்கள்? இவள் தான் குமாரவேல் பிரபுவின் மனைவியாகிய ஏகநாயகிச் சீமாட்டி. குமாரவேல் பிரபுவின் நடக்கை ஒருவாறு நமக்கே தெரிந்தேயிருக்கிறது. அவர் தன் மனைவியிடம் பட்சத்தோடு உட்கார்ந்து பேசுவதில்லை. அன்றுதான் கோயிலில் கலியாணத்தைப் பார்த்துவிட்டு நேராய் வீட்டிற்கு வந்தார்.

அவர் மனதில் பொறாமையும் வியாகூலமும் அதிருப்தியும் பூரணமாயிருந்தது. ஏனெனில் மதனவல்லி தனக்குக் கிடைக்காமற் போனதைப்பற்றி அவன் மனதில் மேற்கண்ட வருத்தங்கள் உண்டாயின. அதன்மேல் அவன் சற்றுநேரம் தோட்டத்தில் உலவிக்கொண் டிருந்தபின் மாளிகைக்குள் நுழைந்து நேராய்த் தன் மனைவியிருக்கும் அறைக்குச் சென்றார்.

அவர் தன் மனைவியை நோக்கி, ஏது தனியாய் உட்கார்ந்திருக்கிறாய். இன்னும் உடுப்புகூட அணிந்துகொள்ளவில்லை'' யென்றார்.

மனைவி:—"இந்த வேளைக்குள் யார் காண வரப்போகிறார்கள்?" என்றாள்.

பிரபு:—நேற்று நீ யேதோ கொஞ்சம் பணம் வேண்டுமென்று கேட்டாய். நான் இன்று கொடுப்பதாய்க் கூறினேன். இந்தா இரண்டாயிரம் பவுன். இதைத் தாகிரி வேலப்பனிடம் கடனாக வாங்கி வந்தேன்.

ஏகநாயகிச்சீமாட்டி:—ஆ! நான் அந்த ஆளைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆயினும் நான் கொடுக்கவேண்டிய தொகைகளுக்கு இந்த இரண்டாயிரம் பவுன்களைக் கொண்டு என்ன செய்வது?

பிரபு மிக்க அசட்டையாய் "ஆனவரையில் பார்த்துக்கொள். மீதிபணம் என் சொந்த செலவிற்கு வேண்டியதாயிருக்கிறது" என்றார்.

அச்சமயம் ஒரு வேலைக்காரன் ஒரு கடிதம் கொண்டு வந்து சீமாட்டியிடம் கொடுத்தான். அவள் இது யாரோ விருந்து முதலியவைகட்கு அனுப்பிய அழைப்புப் பத்திரம் என்று கருதிக்கொண்டு பராமுகமாய்ப் பார்த்தாள் ஆனால் அதன் மேல்விலாசத்தின் எழுத்தைக் கண்டதே திடுக்கிட்டு கலவரமடைந்தாள். அவள் முகத்தில் சட்டென்று ஒரு மாறுதலுண்டாயிற்று. பிரபு அவையாவும் கவனித்தாராகையால் தன் மனைவியை நோக்கி "அது யாரிடமிருந்து வந்த கடிதம்?" என்று கேட்டார்.

சீமாட்டி:—" அப்படி விசேஷமான ஆள் யாருமல்ல" வென்று கூறிவிட்டு அக்கடிதத்தைச் சட்டென்று சுருட்டித் தன் உட்சேபியில் வைத்துக்கொண்டாள்.

நேயர்களே! இத்தகைய சந்தர்ப்பத்தில் நாம் தேசாசாரத்தையும் நாகரீகத்தையும் பற்றிக் கொஞ்சம் கவனிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.

அதாவது மாதர்களுக்கு எவ்வளவு சுயாதீனம் கொடுக்கவேண்டுமோ, அவர்களுடைய நன்மைக்காக எத்தகைய சுயாதீனம் கொடுக்கலாகாதோ வென்ற அளவின்றி எதிலும் அவர்களை ஆடவர்போல நடக்கவிடுவது எவ்வளவு தீங்கிற்குக் காரணமென்பது இச்சம்பவத்தால் நன்கு விளங்கும்.

மேல்நாட்டு ஆசாரமென்னவென்றால், மனைவிக்கு ஒரு கடிதம் வந்தால் அதைக் கணவன் பிரித்துப் பார்க்கலாகாது. அந்தோ! அதுமட்டுமல்ல, அது யாரிட மிருந்து வந்த தென்று கணவன் கேட்பதே ஒழுங்கீனம். அப்படிக்கேட்டாலும் அது யாரிடமிருந்து வருகிறதென்று மனைவி கூறவேண்டிய அவசியமில்லை. அதாவது மேல்கண்டபடி "என் நண்பர் ஒருவர் எழுதினர்" அல்லது "இது ஒரு சினேகி அல்லது சினேகனுடைய இரகசிய விஷயம் அடங்கியது" என்று கூறிவிட்டால் கணவன் பேசாமல் வாயை மூடிக்கொண் டிருக்கவேண்டியதே.

நேயர்களே! இத்தகைய ஆசாரத்தால் எவ்வளவு கெடுதியென்பதைச் சற்று கவனித்துப் பாருங்கள். இதனலுண்டாகும் தீங்குகளை யுணர்ந்த எவரேனும் இந்த ஆசாரத்தை யொரு நல்ல ஆசாரமாய்க் கருதுவார்களோ. அந்தோ! இதனலுண்டாகும் தீங்குகளுக்கு அளவுண்டோ? இத்தகைய ஆசாரத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று கருதுகிறவர்களுடைய புத்தியும் யோசனையும் எத்தகையனவா யிருக்கவேண்டும்? புண்ணிய பூமியாகிய நம் பரத கண்டத்தில் பூர்வபுண்ணியவசத்தால் ஜனன மெடுத்தவர்களில் சிலர், இகபரநன்மைகளை யடைய மிக்க அனுகூலமாகிய நம் முன்னோரது சதாசாரத்தை யலட்சியம் செய்து, மேற்கண்ட ஆசாரத்தைப் புகழ்ந்து, மாதர்களை நாம்

அடிமைகள்போல் நடத்துகிறுமென்றும், அவர்களுக்குப் பூரண சுயாதீனம் கொடுக்கவேண்டு மென்றும் பறை யறைந்துகொண்டு, அப்படி நடந்துகொண்டால்தான் நாம் நாகரீகமடைந்தவராகக் கருதப்படுவோம் என்று எண்ணங் கொண்டு அவ்வாறே போதனை செய்கிறார்கள். அந்தோ இவர்கள் "நாம் இதனால் நம் தாய்நாட்டிற்குப் பெருந் தீங்கை யும் நம் முன்னோர்க்கு அகௌரவத்தையும் உண்டாக்குவ தோடு நமக்கும் பாபமூட்டையைச் சிருட்டித்துக்கொள்ளு கிறோம்" என்று சற்றேனும் கருதுகிறார்களில்லை. கடவுளே யிவர்களுடைய அறிவிற்கு நல்விளக்கத்தை யளிக்கவேண்டு மாய்ப் பிரார்த்திக்கிறோம்.

தன் மனைவி அவ்வாறு விடை யளித்ததால் பிரபு மன வருத்த மடையவில்லை. ஏனெனில் உலகில் சாதாரணமாய் புருடன் மனைவி யிருவர்க்குள்ளும் ஒருவருக் கொருவர் மறைத்துவைக்கும் இரகசியம் இல்லாததுபோல் இவர்களுக் குள் இல்லை. ஆயினும் அக்கடிதம் யாரிடமிருந்து வந்த தென்று தான் கேட்டபோது, தன் மனைவி திடுக்கிட்டதை யும், அச்சமயம் அவள் முகத்தில் உண்டான பயம் வெட் கம் முதலிய குறிகளையும், தன் கேள்விக்கு அவள் கொடுத்த விடையையும், வந்த கடிதத்தை யவள் சட்டென்று சுருட்டி மறைத்துவைத்துக்கொண்டதையும் கருத அவர் மனதில் அதுகாறும் தோன்றாத ஒருவிதச் சந்தேகம் உதித்தது.

குமாரவேல் பிரபு இதுகாறும் தன் மனைவி தனக்குத் துரோகம் செய்யாமலே நடக்கிறாளென்று நம்பியிருந்தார். இப்போது சந்தேக முண்டாய்விட்டது. பிறகு மாலைப் போது சிற்றுண்டி யருந்தியதே பிரபு தன் மனைவியை நோக்கி, "இன்றுமாலை என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்டார்.

மனைவியாகிய ஏகநாயகிச் சீமாட்டி, "நான் உலகாம்பாள் சீமாட்டியின் வீட்டிற்குச் செல்லப் போகிறேன்" என்றாள்.

பிரபு:—" அப்படியானால் நான் கூட வரலாகுமோ ?" என்றார்.

சீமாட்டி:—"இதென்ன அதிசய விஷயம். எனக்கு மட்டுந்தானே அழைப்புப் பத்திரம் வந்திருக்கிறது. அப்படியிருக்கத் தாங்கள் கூடவருவது என்ன மரியாதை" என்றாள்.

பிரபு:—சரிதான் அதைப்பற்றி நான் உன்னைக் கட்டாயப் படுத்தவில்லை. இனிமேலாவது கொஞ்சம் சினேகபாவமாய் நடந்துகொள்ளலாமே யென்பது என் எண்ணம்.

சீமா:—அப்படி யிருந்ததை யார் கெடுத்துக் கொண்டது ?

பிரபு:—நானே கொஞ்சம் தவறாய் நடந்துகொண் டிருக்கலாகும். ஆனால் சந்தர்ப்பங்களையும் கவனிக்க வேண்டும்......

சீமா:—"அதைப்பற்றி வாக்குவாதம் செய்துகொண்டிருக்க இப்போது எனக்கு அவகாசமில்லை. நான் துரிதமாய் உலகாம்பாள் சீமாட்டி வீட்டிற்குச் செல்லவேண்டும். மணி ஏழாய்விட்டது." என்று கூறிக்கொண்டே எழுந்து தன் உடுப்பறையை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

பிரபு, "நானும் சிகசிங்கம் பிரபு வீட்டிற்குச் செல்கிறேன்" என்று கூறிக்கொண்டே, தானும் அறையைவிட்டுப் புறப்பட்டார்.

பிரபு உடனே தன் தலையணியை யணிந்துகொண்டு வெளியில் புறப்பட்டார் சீமாட்டி அவர் செல்வதைப் பார்த்துவிட்டுத் தன் அறைக்குச் சென்றாள். பிரபுவோ நோய்ச் சமீபத்திலிருந்த ஒரு வண்டி மேட்டிற்குச் சென்று ஒரு வண்டி வாடகைக்குப் பேசிக்கொண்டு தான் உள்ளே யுட்கார்ந்து சாளரங்களை யெல்லாம் மூடி விட்டுத் தமது மாளிகைக்கு எதிர்வாடையி லிருக்கும் ஒரு வீட்டினோரத்தில் வண்டியை நிறுத்தச் செய்தார். அங்கிருந்து பார்த்தால் தமது மாளிகை நன்றாய்த் தெரிகிறது. வண்டியின் ஒரு சாளரத்தைக் கொஞ்சம் திறந்து தன் வீட்டை நோக்கிக் கொண்டேயிருந்தார்.

சற்று நேரத்திதிகுள் சீமாட்டியின் வண்டி மாளிகைக்கு வெளியில்வந்து நின்றதும் மிக்க நாணயமாய் உடையணிந்த ஒருமாது முகமூடி யணிந்துகொண்டு மாளிகைக்குள்ளிருந்து வந்து வண்டியில் ஏறினள். யாவும் பார்த்துக் கொண்டிருந்த பிரபு தான் ஏறியிருக்கும் வண்டியின் சாரதியை நோக்கி "அதோ புறப்படுகிறதே யந்த வண்டியைத் தொடர்ந்து செல்" என்று சீமாட்டியின் வண்டியைக் காட்டினர்.

சற்று நேரத்திற்குள் சீமாட்டியின் வண்டி உலகாம்பாள் வசிக்கும் வீதியில் பிரவேசிப்பதைக் கண்ட பிரபு "கடைசியில் உண்மையாகவே அங்குதான் செல்கிருள் போல் காண்கிறது" என்று தமக்குத்தாமே கூறிக்கொண்டாராயினும் மனதிலுண்டான சந்தேகம் மட்டும் நீங்கிவிடவில்லை.

பிறகு சீமாட்டியின் வண்டி உலகாம்பாள் வீட்டெதிரில் நின்றதும் உள்ளிருந்த மாது இறங்கி வீட்டிற்குள் சென்றாள். வண்டி யுடனே திரும்பிச்சென்றது.

பிரபு யாவும் கண்டதே, நாமும் உள்ளேசென்று விருந்திற்கு வந்திருப்போர் கூட்டத்தில் மறைந்துகொண்டு இவள் இங்கு எந்தக் கள்ளக்காதலனையாவது சந்திக்கிறாளாவென்று பார்ப்போம் என்று கருதினர். மறுபடி "சே! அப்படிச் செய்தால் ஒருசமயம் சங்கதி வெளியாய்விடும். பிறகு உண்மையை யறியக்கூடாமலே போய்விடும்" என்று சிந்தித்து உடனே தான் வசிக்கும் வீதிக்குத் திரும்பி அதன் முனையிலேயே வண்டியை விட்டிறங்கி சாரதிக்குச் சத்தம்கொடுத்துவிட்டு மாளிகைக்குச் செல்லலாமா அல்லது சுகசிங்கம்பிரபுவின் மனைக்குச் செல்லலாமாவென்று சிந்தித்தான்.

அச்சமயம் அவன் மனதில் ஒருயோசனை யுதித்தது. அதாவது, தன் மனைவியின் தோழியாகிய ஜெகதாள் என்பவள் மிக்க வனப்புடைய கன்னிகை. அவள்மேல் இப்பிரபுவிற்கு நாட்டமுண்டு. இப்போது தன்மனைவி வீட்டிலில்லாதிருப்பதால் இதுதான் அவள் காதலைப்பெறச் சமயமென்று தீர்மானித்துக்கொண்டான். அச்சமயம் ஒரு மாது வழக்கமாய் ஜெகதாள் உடுக்கும் உடைகளையே யணிந்துகொண்டு வீதியில் துரிதமாய் நடந்து வருவதைக்கண்டு வியப்போடு அவளைச் சந்தித்து, "ஓ! ஜகதா எங்கு செல்கிறாய்?" என்றான்.

அம்மாதோ பிரபு எதிர்பார்த்தபடி நின்று பேசாமல் துரிதமாய் முன் செல்ல முயன்றாள். பிரபு இரண்டுதாண்டாயவளருகிற் சென்று "என்ன இவ்வளவு கோபம். நான் உன்மேல் காதல்கொண் டிருப்பதை நீ யறிவாய். நில் சற்று பேசலாம்" என்று அவள் கையைப் பற்ற முயன்றார். அம்மாது மிக்க திகிலும் கலவரமும் அடைந்தவளாய் ஆத்திரத்தோடு கதறிக்கொண்டு அவர் கைக்குச் சிக்காமல் ஓட முயன்றாள்.

இச்செய்கையைக் கண்ட பிரபு சொல்லொணு வியப்பும் கோபமு மடைந்து, "இரு இரு நில் என்று அவள் பின்னுல் ஒடினர். அவள் அச்சமயம் எதிரில் வரும் எழெட்டு ஆடவர்களை நோக்கி அவர்களிடம் அடைக்கலம் புகப் போகிறவள்போல் ஓடினுள்.

பிரபு பார்த்தார் இனி யவளைத் தொடர்ந்து சென்ருல் நமக்கு அவமானமாகு மென்று கருதி மிக்க கோபத்தோடு தன் மனைக்குச் சென்ருர். சென்று தன் அறையில் உட்கார்ந்து சிந்தித்தார். தன் மனைவியின் நடக்கையி லுண்டான சந்தேகமும், வேலைக்காரி தன்னை யவமரியாதையாய் நடத்தியதும் அவர் மனதிற்குச் சகிக்கொணு வருத்தத்தை யுண்டாக்கின. அச்சமயம் அவர் மனதில் ஒரு யோசனை யுதித்தது. அதாவது, தன் மனைவி அந்த இரகசியக் கடிதத்தைக் கையிலெடுத்துக் கொண்டுபோ யிருக்கமாட்டாள். அவள் வர இன்னும் நேரமாகும். அதற்குள் அவள் பெட்டிகளைச் சோதித்துப் பார்த்தால் கள்ளக் கடிதங்கள் இருந்தால் அகப்படும்" என்பதே.

பிரபு உடனே எழுந்து மேல்மாடிக்குச் சென்று கொத்துச் சாவிகளை யெடுத்துக்கொண்டு தன் மனைவியின் கைப்பெட்டிகளை யெல்லாம் திறந்து பார்த்தார். கடைசியில் ஒரு கடிதம் அகப்பட்டது. பிரபு உடனே அதை யரவலோடு வாசித்தார். அது உலகாம்பாள் சீமாட்டி தன் மனைவிக் கெழுதியதென்று தெரிந்தது. அதில் கீழ்க் கண்டபடி வரைந்திருந்தது.

"என் அருமைச் சினேகியாகிய ஏகநாயகிச் சீமாட்டிக்கு:—நீ அவசாமா யனுப்பிய கடிதம் சேர்ந்தது. ஜெகதாளிடமே அதற்குப் பதில் அனுப்புகிறேன். மாலைப் போது முழுமையும் நான் வீட்டில்தா னிருப்பேன். வழக்கம்போல்

அவசியமான எச்சரிக்கைகளைச் சாக்கிரதையாய்க் கவனிப்பேன். அந்த விஷயத்தைப்பற்றி நீ சற்றும் அச்சப்பட வேண்டாம். ஏகநாயகிச் சீமாட்டியன்னில் வேறு ஒருவரையும் உள்ளேவிடவேண்டாமென்று கண்டிப்பாய்க் கட்டளையிட்டிருக்கிறேன். ஆனால் உன் தோழியாகிய ஜெகதாளைப் பூரணமாய் நம்பலாகுமா என்பதைப்பற்றி ஜாக்கிரதையாய்க் கவனிக்கவும்.

இப்படிக்கு
உலகாம்பாள்."

இக்கடிதத்தை வாசித்ததும் பிரபுவின் சந்தேகம் உறுதிப்பட்டுவிட்டது "உலகாம்பாள் புருடனை யிழந்தவள். அவள் வீட்டில் அவள் புத்திரர் சகோதரர் முதலிய எத்தகைய சுற்றத்தாருமில்லை. அப்படியாயின் தன் மனைவி வேறு யாரோ கள்ளக் காதலனையே யங்கு சந்திக்கப் போவதாகவேண்டும். இதில் ஏதோ பெரிய மர்மம் இருக்கிறது. எதுவாயிருந்தாலும் இந்த ஜெகதாள் இதற்கு உளவா யிருக்கிறாள் என்று நன்கு விளங்குகிறது. இவளைப் பக்குவப்படுத்தினால் இவள் மூலமாய் இந்த இரகசியத்தை யறியலாகுமா. சற்று முன்பு அவளுக்கு மனவருத்தம் உண்டாகும் வண்ணம் நடந்துகொண்டோமே........" என்று சிந்தித்தார்.

இச்சிந்தனை யொருபக்க மிருக்கட்டுமென்று இன்னும் பெட்டிகளைச் சோதித்தபோது தான் முன்பு ஒருவர்க்கு எழுதிக்கொடுத்து, பிறகு பணம் கொடுத்து பைசலாய் விட்ட ஒருபத்திரம் அகப்பட்டது. அது நியாயமாய்த் தன்னிடத்திலுள்ள பழைய பத்திரக் கட்டுகளிலிருக்கவேண்டும். இது என்னப்படி இவள்பெட்டியில் வந்தது என்று சிந்தித்தார். ஒருகாரணமும் புலப்படவில்லை. மறுபடி "சே இது அலட்சியமான விஷயம்" என்று கருதிக்கொண்டார்.

186542
சென்னை-600 003

# மாதவி மாதவன் அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

(2 - பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி

அல்லது

## ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் அவரை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி பிள்ளை, மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# "ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ளு ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 64 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூபா | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ... | 4 | 0 | திலகசுந்தரி | 1 | 0 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | ரத்தினபாய் ... | 1 | 12 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | வீரநாதன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2பாகம் ... | 3 | 8 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| இராஜாமணி .. | 2 | 0 | கமலசேகரன் ... | 1 | 12 |
| ஆனர்தவிங் ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 10 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ... | 9 | 10 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| | | | லோகநாயகி | 1 | 0 |

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.